விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 19 திங்கட்கிழமை (02.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 045

# நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை ஐ.நா செயலர் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்து




(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற நம்பகமான விசாரணைப் பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி பிரார்த்தனை

### இந்து அமைப்புகளின் கூட்டமைப்பு ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி இலங்கை இந்து அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் விசேட வழிபாட்டுப் பிரார்த்தனை இடம்பெற்றுள்ளது.

நேற்று மு.ப 10.30 மணியளவில்

23ஆம் பக்கம் பார்க்க....

## சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை வாசகம்

(கொழும்பு)

இலங்கையில் விற்பனையாகும் சிகரெட் பெட்டிகளில் படத்துடன் கூடிய இருதய நோய் எச்சரிக்கை வாசகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த கட்டாய விதியை மீறுகி

24ஆம் பக்கம் பார்க்க....

## தை மாதத்தில் 4700 பேருக்கு டெங்கு பாதிப்பு

(கொழும்பு)

, நாட்டில் வருடத்தின் முதல் தை மாத காலப்பகுதிக்குள் நான்காயிரத்து 700 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் 7 பேர்

23ஆம் பக்கம் பார்க்க....

## பேக்கரி உணவு, சிற்றுண்டிகளின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

பேக்கரி தயாரிப்பு உணவுகள் அனைத்திற்கும் விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது மைத்திரி அரசும் தடை நீடிப்பு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு கடந்த அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருந்த தடை தொடர்ந்தும் நீடிக்கப்படுமென பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை மீள உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்பட்டு, புலம்பெயர் அமைப்புக்களுக்கு மகிந்த அரசாங்கம் தடை விதித்திருந்தது.

அந்த தடையை தொடர்ந்தும் நீடிப்பதே புதிய அரசாங்கத்தின் நோக்கம் என்று ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போது பிரதி வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் மீண்டும் தலைதூக்காதிருக்கும் வகையில் இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த புதிய அர

24ஆம் பக்கம் பார்க்க....

## பைசர் முஸ்தபா இராஜினாமா!




(கொழும்பு)

விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று

24ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸார் துரத்தியதில் இளைஞன் நீர்த்தேக்கத்தில் பாய்ந்து மரணம்

### மக்கள் ஆர்ப்பாட்டம், பொலிஸ் கண்ணீர்ப்புகை



(கொழும்பு)

பொலிஸார் துரத்திச் சென்றதில் நீர்த்தேக்கத்தில் பாய்ந்து மரணமான சந்தேக நபருக்கு ஆதரவாக தலவாக்கலை பிரதேச மக்கள் ரயிலை மறித்து ஆர்ப்பாட்டம்

24ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சர் விக்கியுடன் இன்று வடக்கின் புதிய ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் புதிய ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பலிஹக்காரவுக்கும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு இன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அரசாங்கத்துக்கும், வடக்கு மாகாண சபைக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தி ஒத்துழைத்துச் செயற்படுவது

24ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வடக்கு கிழக்கிற்கு இவ்வாரம் விஜயம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்புத் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இந்த வாரம் இப்பகுதிகளுக்கு பயணம் செய்யவுள்ளார்.

வடக்குக் கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து மீளாய்வு

23ஆம் பக்கம் பார்க்க....

## ஸ்ரீபவனின் காலத்தில் நீதித்துறை முன்னேறும்

### வடக்கு முதலமைச்சர் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் புதிய தலைமை நீதியரசராக பதவியேற்றுள்ள கே. ஸ்ரீபவனின் காலத்தில் நாட்டின் நீதித்துறை வலுவடைந்து நல்ல நிலையை நோக்கிச் செல்லும் என்று ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

இலங்கையின் நீதித்துறை கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பல்வேறு பின்னடைவுகளை சந்தித்திருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இந்த சூழ்நிலையிலேயே, புதி

24ஆம் பக்கம் பார்க்க....

காரைநகர் திருவருள்மிகு மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா
இன்று (02.02.2015) திங்கட்கிழமை காலை 9.36 முதல் 10.45 வரை
மண்டலாபிஷேகம் 30 தினங்கள் நடைபெறும்
அம்பிகையின் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து அம்பாளைத்தரிசித்து திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(சி-9978)
மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணிச் சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 21.09.1948

ஆண்டவன் அடியில் 04.01.2015



அமரர்

## சின்னத்தம்பி இராஜரத்தினம்

சுமைதாங்கியாய் எமக்கிருந்து பல வழிகள் காட்டி எம்மை
பார் போற்ற வழிகாட்டி – இன்று பரிதவிக்க விட்டுவிட்டு பறந்தோடி
மறைந்ததென்ன... தினம் தோறும் உங்கள்
நிகழ்வுகளை மறக்கத்தான் முடியவில்லை
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 04.01.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி இராஜரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.02.2015) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.02.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களிற்கும், சகல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தாமரைக்குளத்தடி, துன்னாலை,கரவெட்டி.

-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 பில்லியன் வீண் விரயம்

## மகிந்த மீது மற்றுமொரு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் இயங்கி வந்த பெருந்தெருக்கள் அமைச்சினால் சுமார் 50 பில்லியன் ரூபாய்கள் வீண் விரயம் செய்யப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.**

அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க, மேலதிகமாக 50 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதில் பெருமளவுத்தொகை பணம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது செலவிடப் பட்டுள்ளது.

இதேவேளை பெருந்தெருக்கள் அமைச்சினால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் 70 வீதமானவை தேவையற்ற செலவுகள் என்று அமைச்சர் கபீர் காசிம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது பொய்யான செலவுக்கணக் குகள் காட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரி வித்துள்ளார்.

இதனையடுத்து மொரட்டுவை பல்கலை க்கழக நிபுணர்களின் உதவியுடன் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச் சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வரவு செலவுத் திட்ட நிவாரணமானது தேர்தலுக்காக போடும் குண்டு அல்ல

வரவு செலவு திட்டத்தின் மூலம் மக்க ளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் தேர்த லுக்காக போடும் குண்டு அல்ல என கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நந்த மித்ர ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலுக்கு பின்னர் அத்தியா வசிய பொருட்களின் விலை அதிகரிக்கும் என சில கட்சிகள் பிரசாரம் செய்வதில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர், இந்த கருத்தினை தெரிவித்தார். (இ-5)

## 100 வருடங்கள் பழைமையான புத்தரின் சிலை திருடப்பட்டுள்ளது

பதுளை அந்தெனிய கங்காராம புராண ரஜமகா விகாரையில் இருந்து சுமார் 100 வருடங்கள் பழைமையான, சமாதி நிலை யில் காணப்படும் புத்தர் சிலை கொள்ளையிட ப்பட்டுள்ளது.

அத்துடன் சிறிய, பித்தளையிலான புத்தர் சிலைகள் இரண்டும் திருடப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம்சனிக்கிழமை இரவு இந்த திருட்டு சம்ப வம் இடம்பெற்றுள் ளது. சம்பவம் தொட ர்பான மேலதிக விசாரணைகளைப் பதுளை பொலிஸார் மேற் கொண்டுள் ளார். (இ-5)

வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 - பி.ப 1.00 மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

மொறாயஸ்



ஸ்தாபிதம் (1962) 50 வருடகால சேவையில் மொறாயஸ்.
உங்கள் முக அமைப்புக்கு ஏற்ப மூக்குகண்ணாடிகளை
மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாட
வேண்டிய இடம் மொறாயஸ். 50 மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். பழைய வெலிங்டன் தியேட்டர் முன்பாக
(முனீஸ்வரர் கபே) (லிங்கம் கூல்பார் சந்தி)
இரண்டு பார்வை கண்ணாடி (Golde Frame)
இல் மிகவும்குறைந்த விலையில் ரூபாய் 850 மட்டுமே.

தொலைபேசி இல: 021 221 7514

# ஈழத்தமிழ் அகதிகளிடமும் கருத்துக்கேட்க வேண்டும்

## ஜி.கே.வலியுறுத்து

(சென்னை)

தாயகம் திரும்புவது குறித்து தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளிடமும் கருத்துக் கேட்க வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் தமிழர்கள் அனைவரும் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்ததால் அந்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, தங்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழர்களுக்கு சம அந்தஸ்து அளிக்கும் அரசியல் சட்டத்தின் 13ஆவது திருத்தம் விரைவில் அமுல்படுத்தப்படும் என அந்நாட்டு பிரதமர் பாராளுமன்றத்தில் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அறிவிப்போடு நின்றுவிடாமல் சிங்களவர்களுக்கு இணையான உரிமைகளும், அங்கீகாரமும் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தி குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

தமிழகத்தில் 100 இற்கும் அதிகமான முகாம்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிக மான இலங்கை அகதிகள் உள்ளனர். அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வரு கிறது. அகதிகள் தாய்நாட்டுக்கு திரும்பி தங்களது சொந்த ஊரில் குடியேற வீடு, கல்வி, வேலை வாய்ப்பு என அனைத்து வசதிக ளையும் இலங்கை அரசு செய்து தர வேண் டும். தாய் நாட்டுக்கு திரும்புவது தொடர்பாக இலங்கை அகதிகளை கருத்துக் கேட்க வேண்டும்.

அவர்களது விருப்பத்துக்கு மாறாக யாரை யும் கட்டாயப்படுத்தி இலங்கைக்கு அனுப்பக் கூடாது. நல்ல முடிவு ஏற்படும் வரை தமிழ கத்தில் உள்ள முகாம்களில் தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள் இலங்கை அரசோடு பேச்சு நடத்தி தமிழகத்தில் உள்ள அகதிகள் தாய் நாட்டுக்குத் திரும்புவது தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக் கும் சுமுகத் தீர்வு காண வேண்டும் என வாசன மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## 10 ஆம் ஆண்டு நினைவுகளில்...

**அமரர் செல்லையா ரஜனிகாந்**
**(சுரேன்/ சங்கமன்)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22.11.1974 | 25.01.2005 |

திதி
தை மாத வளர்பிறை சதுர்த்தசி
(02.01.2015)

காலம் வருமுன்னே கணக்கெழுதி வைத்துவிட்டு
காலனவன் கைப்பற்றிய காரணத்தை
நாமறியோம்
கதிகலங்கி நிற்கின்றோம் சுரேன்!
வருவாய் நீயென்று வாசலில் நிற்கின்றோம்
வரவைக் காணாது வருந்துகின்றோம்
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

4/2, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (9402) குடும்பத்தினர்.

## இராசி பலன்

02.02.2015
தை 19, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.38 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 3.49 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
வளவன்

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படை வீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வு களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த முயற் சிகள் கைகூடுவதற்கான வாய்புண்டு.

**இடபம்:** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங் காகும், தைரியத்தோடு செயற் பட்டு சாதனைகள் படைக்கும் நாள், உடன்பிறப்புக்கள் உள்ளம் மகி ழும் செய்தியொன்றைக் கொண்டு வரலாம், வழிபாடு குதூகலம் தரும்.

**மிதுனம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழிலில் உய ரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், செய் தொழி லில் அதிக பிரியாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், விருப் பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், வெளி யூர் பயணமொன்றால் செலவு கள் அதிகரிக்கலாம். போசன சுக முண்டு.

**சிம்மம்:** கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், திடீர் பயணமொன்று ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம் பவமொன்று நடைபெறலாம், பொருளாதார வழியில் முன் னேற்றம் காண்பீர்கள், பயணங் களால் பலனுண்டு, முயற் சிகளில் முன்னேற்றமுண்டு.

**துலாம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், புதிய திட்டங்கள் தீட் டுவீர்கள், பிரியமான சிலரின் சந் திப்பு இடம்பெறலாம், உறவின ர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தேகநலனில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் ஆதாயமுண்டு, சொத்துக்களால் நன்மையுண்டு, [illegible] புகழ் கூடும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**தனுசு:** கவலைகள் தீர கணபதியை வழி பட வேண்டிய நாள், குடும்ப பெரி யவர்கள் உங்கள் செயற்பாடு களில் குறைகண்டு கூறலாம், தொழில் போட்டிகள் அதிகரிக் கும் நாள்.

**மகரம்:** நினைத்த காரியம் கைகூடும் குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொழிலில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய் ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** கடன் பிரச்சினைகளை சாமர்த்தி யமாக பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியமான நாள், தெய் வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**மீனம்:** பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசித்தகவல் மகிழ் ச்சி தரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களின் எதிர்பார்ப்பை ஓரளவு பூர்த்தி செய்துள்ள பட்ஜட்

புதிய அரசாங்கம் கடந்த வாரம் சமர்ப்பித்துள்ள இடைக்கால வரவு- செலவுத் திட்டம் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஓரளவுக்கு பூர்த்திசெய்துள்ளது எனலாம்.

சாதாரண மக்களின் வருமானங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் ஓரளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின்போது பொது எதிரணியின் 100 நாள் திட்டத்தினை உள்ளடக்கி தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தனர். இதில் தமது புதிய அரசாங்கம் பதவி ஏற்றவுடன் அரசாங்க ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும 10 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்றும வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது.

இதற்கிணங்க புதிய அரசாங்கமானது கடந்த 29-ம் திகதி தனது இடைக்கால வரவு-செலவுத்திட்டதை சமர்ப்பித்தது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்த இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வாக்குறுதி வழங்கியபடி அரசாங்க ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதத்திலிருந்து 5,000 ரூபாவும் எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து 5,000 ரூபாவும் சம்பள உயர்வாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளமும் 2,500 ரூபாவினால் அதிகரிக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருப்பதுடன் ஏப்ரல் மாதம் முதல் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1,000 ரூபா அதிகரிப்பும் வழங்கப்பட்டிருக்கின்றது.

10 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும் 13 பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. பால்மாவின் விலை 61 ரூபாவினாலும் சமையல் எரிவாயுவின் விலை 300 ரூபாவினாலும் கோதுமை மாவின் விலை 12 ரூபா 50 சதத்தினாலும் ரின்மீனின் விலை 60 ரூபாவாலும் மண்ணெண்ணெயின் விலை 6 ரூபாவினாலும் சீனியின் விலை 10 ரூபாவினாலும் நெத்தலியின் விலை 15 ரூபாவினாலும் குறைக்கப்பட்டிருப்பதுடன் பாசிப்பயறு, கொத்தமல்லி, மாசி, மஞ்சள், உளுந்து, மிளகாய்த்தூள் என்பவற்றின் விலைகளும் குறைக்கப்பட்டிருக்கின்றன

இவ்வாறு பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமையானது சாதாரண மற்றும் நடுத்தர மக்களுக்கு நன்மையை அளித்திருக்கின்றது. கடந்த சில வருடங்களாகவே அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பெருமளவு அதிகரிக்கப்பட்டு வந்தது. எரிபொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன. இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

விலைவாசி ஏறிக்கொண்டிருந்த நிலையில் மக்களுக்கான வருமானம் அதிகரிக்கப்படவில்லை. இதனால் மக்கள் பெரும் துன்பத்தில் மூழ்கியிருந்தனர். ஆனால், சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்த போதிலும் எமது நாட்டில் குறைக்கப்படாதநிலையே நிலவியது.

இந்தநிலையில் கடந்த வாரம் எரிபொருட்களின் விலைகளை புதிய அரசாங்கமானது குறைத்திருந்தது. பெற்றோல் 33 ரூபாயினாலும் டீசல் 16 ரூபாயினாலும் மண்ணெண்ணெய் 16 ரூபாயினாலும் குறைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து பஸ் கட்டணங்களும் நேற்று முதலாம் திகதியிலிருந்து 7 தொடக்கம் 8 வீதத்தினால் குறைவடைகின்றது. பாடசாலைகளுக்கான வாகனங்களின் கட்டணமும் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தற்போது வரவு-செலவுத் திட்டத்தில் மண்ணெண்ணெயின் விலை மேலும் 6 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. மாவின் விலை குறைக்கப்பட்டமையினால் பாணின் விலையும் குறைவடையும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. திருமணப் பதிவுக் கட்டணம் 1000 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. 2 இலட்சத்துக்குக் குறைவான அடைவு நகைகளின் வட்டி இரத்துச்செய்யப்பட்டுள்ளது. மகாபொல புலமைப் பரிசில் 5,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் சமுர்த்தி கொடுப்பனவு 200 சதவீதமாக அதிகரித்திருக்கின்றது. கர்ப்பிணித் தாய்மாருக்காக 20,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உருளைக்கிழங்கின் உத்தரவாத விலையும் 80 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் நெல்லுக்கு உத்தரவாத விலை 50 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. உர நிவாரணம் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசிகள் மீள்நிரப்பு நடவடிக்கையாளர்களுக்கு 25வீத வரி இரத்துச் செய்யப்பட்டுள்ளது. விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி நிலையங்களுக்கு 1000 மில்லியன் ரூபா வரியும் கையடக்க தொலைபேசி நிறுவனங்களுக்கு 250 மில்லியன் ரூபா ஒரேதடவை வரியும் தொலைத்தொடர்பாளர் சேவைகளை வழங்குவோர் ஒரேதடவையாக 250 மில்லியன் ரூபா வரி செலுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மதுபான விற்பனை நிலையங்களை வைத்திருப்போர் 3 அனுமதிப்பத்திரங்களை மட்டுமே வைத்திருக்கமுடியும். இதற்கான கட்டணங்களும் இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு அதிசெல்வந்தர்கள் மீது வரிகளை விதித்து வறியவர்கள், நடுத்தர வர்க்கத்தினருக்கு உடனடி நிவாரணங்களை வழங்கும் வகையில் இந்த வரவு-செலவுத்திட்டம் அமைந்திருக்கின்றது.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் வீண்செலவைக் குறைத்து சகல தரப்பையும் திருப்திப்படுத்த முயற்சிக்கும் வகையில் திட்டங்கள் உளளடக்கப்பட்டுள்ளன. புதிய அரசாங்கமானது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் வரவுசெலவுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ளமை நாட்டு மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

வரவு-செலவுத்திட்டத்தில் விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் நெல்லுக்கு உத்தரவாத விலை அளிக்கப்பட்டுள்ளமையினால் அரிசியின் விலை குறைக்கப்படவில்லை என்று தெரிகின்றது.

வரவுசெலவுத்திட்டத்திலும் அதற்கு முன்னரும் எரிபொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருடகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமையினால் நடுத்தர மற்றும் சாதாரணதர மக்கள் ஓரளவுக்கு மீட்சிபெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த பட்ஜெட்டில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. ஆனால் நாட்டில் தனியார் துறை ஊழியர்களே அதிகளவில் உள்ளனர். இந்த தனியார்துறையினருக்கு சம்பளத்தை உயர்த்தும் விடயத்தில் அரசாங்கமானது வெறும் பரிந்துரையை மட்டுமே செய்திருக்கிறது. அரசாங்கத்தின் இந்த பரிந்துரையை சகல தனியார் நிறுவனங்களும் நிறைவேற்ற அரசாங்கம் மேலும் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

அத்துடன் பொருட்கள், சேவைகளின் விலைகளை மேலும் குறைத்து மக்கள் தமது வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமையவேண்டும்.




ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## வெற்றிமொழி-நெப்போலியன் ஹில்

1883-ஆம் ஆண்டு பிறந்த நெப்போலியன் ஹில் அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர். 1908-ஆம் ஆண்டு புகழ்பெற்ற தொழிலதிபர் ஆண்ட்ரூ கார்னெகியை சந்தித்ததே நெப்போலியன் ஹில்லின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. வெற்றிக்கான கார்னெகியின் எளிய செயல்முறை, ஹில்லின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஹில்லின் "திங்க் அண்ட் க்ரோ ரிச்" என்னும் புத்தகம் மிகவும் பிரபலமாக விற்பனையான சிறந்த புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. தனிப்பட்ட வாழ்க்கை முறைக்கான இவரது கருத்துகள் உலகளவில் மிகவும் புகழ்பெற்றவை.

- மனிதனின் மனம் எதை நம்பிக்கையுடன் திட்டமிடுகிறதோ, அதை அடைந்தே தீரும்.
- உங்களால் பெரிய விஷயங்களைச் செய்யமுடியவில்லை என்றால், சிறிய விஷயங்களைச் சிறந்த வழியில் செய்து பாருங்கள்.
- எப்போது உங்கள் ஆசைகள் போதுமான வலுவுடன் இருகின்றதோ, அப்போது அதனை அடைவதற்கான அதிகபட்ச சக்தி உங்களுக்குக் கிடைக்கின்றது.
- எதற்காகவும் காத்திருக்க வேண்டாம், இந்த நிமிடமே சரியான நேரம்.
- முயற்சியில்லாதவர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை வெற்றியாளர்கள் ஒருபோதும் முயற்சியை விடுவதில்லை.
- நம்மால் நமது மனதிற்குள் அமைத்திருப்பதே, நம்முடைய ஒரே வரம்புகள் ஆகும்.
- நமது செயல்பாடே அறிவுத்திறனுக்கான உண்மையான அளவு கோலாகும்.
- அறிவை நோக்கி தொடர்ந்து செல்லும் பாதையே, வெற்றிக்கான வழி.
- நமது இலக்கு என்பது காலக்கெடுவுடன் கூடிய கனவே.
- எதை நாம் சரியாக புரிந்துக்கொள்ளவில்லையோ அதையே நாம் நம்ப மறுக்கின்றோம்.
- மற்றவர்களின் இயலாமையைப்பற்றி பேச வேண்டும் என்றால் பேசாமலிருப்பதே சிறந்தது.
- விருப்பமே அனைத்து வெற்றிகளுக்குமான முதல் படியாகும்.
- உங்களுக்கான மிகப்பெரிய வாய்ப்பானது, நீங்கள் இப்பொழுது எங்கிருக்கிறீர்களோ அங்கேயேகூட இருக்கலாம்.
- பேசுவதற்கு முன்பு ஒருமுறைக்கு இருமுறை யோசித்துக் கொள்ளுங்கள், ஏனென்றால் உங்கள் வார்த்தைகள் மற்றொருவரின் மனதில் வெற்றி அல்லது தோல்விக்கான விதையை விதைக்கக்கூடும்.
- தொடர்ச்சியான முயற்சி மற்றும் போராட்டத்தின் மூலமே, வலிமை மற்றும் வளர்ச்சி நமக்கு கிடைகின்றது.
- போராட்ட குணத்தைக் கைவிட மறுப்பவர்களுக்கு, வெற்றி எப்பொழுதும் சாத்தியமே.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,276.63 | 7,180.05 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,078.89 | 3,962.24 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,103.992 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** பிசி ஹவுஸ்(0.30), சிலோன் லெதர் (W) (2.90), ஆர்பிகோ (165.00), றோயல் பார்ம்(41.10), சிரஸ் வஸ்கடுவ (6.70).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சலிமர்(1650.00), மிரமர்(51.30), எஸ்எம்பி லீசிங்(X)(0.40), ஜே.கே.எச்(51.00), டயலொக்(12.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## TVS புதிய மாதிரிகள் அறிமுகம்




மோட்டார் சைக்கிள்கள் ஸ்கூட்டர்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றின் விற்பனையில் இலங்கையில்முன்னோடியாக திகழும் TVS லங்காபுத்தம் புதிய மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி தொகுதியை அறிமுகம் செய்துள்ளது.

தனது ஸ்கூட் டர் தெரிவுகளில் புதிய உள்ளம்சமாக TVS Scooty Zestஐ அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் ஸ்கூட்டர்கள் பிரிவில் அசைக்க முடியாத முன்னிலையாளராக தெரிவாகியுள்ளது.

TVS Scooty Zest 110 என்பது நவீன தோற்றத்தில் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில காணப்படும் கிராஃபிக்ஸ் மறறும் வர்ணங்கள் போன்றன அதிகளவு கவர்ச்சிகரமாக அமைந்துள்ளன. இதில் 110CC என்ஜின் காணப்படுவதுடன் 0-66Kmph வேகத்தை 11.1 செக்கன்களில் எய்தக்கூடியது.

சந்தையில் அண்மையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த TVS KING FLD அதிகளவு கேள்வியை பெற்றுள்ளது. இதில் மேலதிக 35 உள்ளம்சங்கள் காணப்படுகின்றன. TVS KING FB மாதிரியின் அறிமுகம் என்பது பேக்கரி உற்பத்திகளை விநியோகிப்பதற்காக போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுக்கும வகையில் இந்த முச்சக்கர வண்டி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## எண்ணெய் அகழ்வில் முன்னேறும் கெய்ன்

கெய்ன் இந்தியா நிறுவனம், மன்னார் கடற்படுகையில் கண்டுபிடிக்கப்பட்ட எரிவாயு தொகுதியில் மீள் முப்பரிமான ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

இந்த செயற்பாடுகள் தொடர்பாக கெய்ன் நிறுவனம் 2014-ம் டிசம்பர் மாதம் 30-ம் திகதி முடிவடைந்த 3-ம் காலாண்டிற்கான அறிக்கையில் தெரிவித்திருந்ததமை குறிப்பிடத்தக்கது.

கண்டுபிடிக்கப்பட்ட எரிவாயுவை வர்த்தகமய மாக்குவதில் பெரும் சவால்கள் காணப்படுகிறது. இறுதியில் கெய்ன் நிறுவனம் முப்பரிமாண தரவுகளுடன் நடப்பு காலாண்டில் தமது அகழ்வு ஆய்வு நடவடிக்கைகளை மீளவும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளது" என நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.77 | 134.70 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 197.99 | 203.77 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.44 | 153.43 |
| சுவிஸ் பிராங் | 141.82 | 147.06 |
| கனேடிய டொலர் | 103.85 | 107.31 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.64 | 105.79 |
| சிங்கப்பூர் டொலர் | 97.00 | 100.27 |
| ஜப்பான் யென் | 1.11 | 1.14 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.14 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.99 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழாச் சிறப்புமலர்- 02.02.2015



**மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி**


வீரகத்தி விநாயகர் மெய் யடியார்களே ஜயவருஷ மஹோற்சவம் சிறப்பான முறையிலே நடைபெறுகின்றது. இந்த மஹோற்சவம் செய்வதன் நோக்கம் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இவ்வுலகத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட எமது உடலை இறைவனுக்கு சமர்ப்பித்து இறைவனுக்கு செய்யப்படுகின்ற பூசையே மஹோற்சவம் ஆகும். நித்திய நைமித்திய பூசைகளில் விடுகின்ற பிழைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு இப் பூஜை பரார்த்த பூஜையாக நடைபெறுகின்றது. இப்பூசையின் பலனாக நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படவேண்டும்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**

எல்லா உயிர்களுக்கும் எல்லாவிதமான பலன்களும் கிடைக்க ஆசீர்வதிக்கின்றேன்.

சுபமஸ்து

சிவபூஜாதுரந்தரர்
சிவமங்களேஸ்வரக்குருக்கள், மஹோற்சவ பிரதமகு,ரு திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி வீரகத்தி விநாயகர் ஆலயம்.





**வாழ்த்துச் செய்தி**

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று தேர் திருவீதியுலா வருவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

பல்வேறு இடர்களுக்கும் பிரச்சினைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு அந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு நல்ல சுபீட்சமான எதிர்காலம் அமையவும் எல்லாத் துறையில் இருக்கின்றவர்களும் பதவியுயர்வு பெற்று மேலோங்கிடவும் நாட்டிலே சாந்தியும் சமாதானமும் பெற்று அனைவரும் சிறப்பான முறையிலே வாழவும் வீரகத்தி விநாயகர் தேரேறி வரும் இந்த இனிய நல்ல நாளிலே விநாயகரின் பாதாரவிந்தங்களை போற்றி வணங்குவோமாக.

**Mr.S.Suresh, Assistant Manager Regional Development Bank Jaffna Branch**



**ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்து**

கல்வி, கலை, ஞானம், தொழில் வளப்பெருக்குடன் நிமிர்ந்துள்ள திருநெல்வேலியின் ஆன்மீக அழகுக்கு மென்மேலும் அழகு சேர்ப்பதற்காக பரமேஸ்வராச் சந்தியில் கோயில் கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று தேர்பவனி வருவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

அசையும் கோயிலாகவும் நடமாடும் மரச் சிற்பமாகவும் உயர்ந்த கலைச்செல்வமாக விளங்கும் திருத்தேரிலே எழுந்தருளுகின்ற வீரகத்தி விநாயகப் பெருமானை நெஞ்சில் பதிக்கும்போது உடம்பினால் செய்யும் செயல்களும் உரையினால் சொல்லும் செயலும் உரம் பெறும், வாழ்வு வளம் பெறும், வீரகத்தி விநாயகப்பெரு மான் திருத்தேர் வடம் பிடித்து இழுத் தால் அற்புத கீர்த்தி பெருகும், ஆனந்தவாழ்வு கிடைக்கும், நற்பொருள் குவியும், நல மெல்லாம் விளையும், தேரேறி வரும் வீரகத்தி விநாயகனை பக்தர்களாகிய அனைவரும் வந்து வடம்பிடித்து விநாயகனின் அருளாசியினைப் பெற்றுக் கொள்ள இந்நாளிலே வேண்டிக் கொள்கின்றேன்.

திரு.க.நகுனகுலசிங்கம்
தலைவர்

**மலரமைப்பு:**
**எஸ்.ஞானேஸ்வரன்**
Agency Leader
Allians Insurance
Lanka Ltd.

## வீரகத்தி விநாயகர் தேரேறி வர வாழ்த்துவோர்


எரிபொருள் நிரப்பு நிலையம்
இல. 173, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
பெண்களுக்கான
சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட், ரீசேட்
ரெடிமேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல
ஆடை வகைகளையும்பெற்றுக்கொள்ள பட்டுச்
சேலைகளின் சோலைவனம்
இல.105, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6953

ஸ்ரீ ஐங்கரன் சூபலஸ்
இல. 315B, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி

Parameshwaran
Licensed Surveyor &
Leveller
இல.354, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
பதிவு இலக்கம் 19741613

அபிராமி பல்பொருள் வாணிபம்
இல.315 A, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.

வீரகத்தி விநாயகரே தேரேறி வருக!
சகல விதமான மின்வலுசக்தி உபகரணங்கள் மற்றும்
சில்வர் பைப் வகைகள், மின்சார
தராசு வகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
நந்தலாலா இரும்பகம்
இல.29, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

சுந்தரம் பிறதேஸ்
எம்.எஸ். மருந்தகம்
சித்த ஆயுர்வேத மருந்துப் பொருட்கள், ஆயுர்வேத
மருந்து உற்பத்திப் பொருட்கள் (சூரியா தசாங்கள்
உற்பத்தியாளர்) அனைத்தும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
23/2, மணற்றறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 6384, 077 7451 646




N.SACHITHANANTHAN
Proprietor
Mob: 0777315087
Tel : 021-2222503
Fax : 021-2228441
இளவரசி சேலைச்சோலை
(பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்)
ELAVARASI TEXTILE
(Specialist in Wedding Sarees)
57 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.
57, New Market
Jaffna.



AJ SYSTEMS
M + 94 75 9997798
O + 94 21 2219234
F + 94 21 2219235
AJ SYSTEMS | PVT LTD
No 315,1/2 Palaly Road, Thirunelvely, Jaffna, SRI LANKA
senthan@aj-sys.lk
www.aj-sys.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மருதடி விநாயகருக்கு இன்று மஹா கும்பாபிஷேகம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய ஆவர்த்தன பிரதிஷ்டா நவ குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது.


இதேவேளை மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமானுக்கு எண்ணெய்க்காப்பு சாத்துவதற்காக அடியவர்கள் ஆர்ப்பரித்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

நீண்டகாலத்திற்குப் பின்னர் மருதடி விநாயகப் பெருமானுக்கு இடம்பெறும் பெரும் விழாவாகக் கருதப்படும் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிநாடுகளிலுள்ளவர்களும் வருகைதந்து எண்ணெய்க்காப்பு சாத்தியதை அவதானிக்க முடிந்தது.

நீண்ட வரிசையில் கால் கடுக்க வெயிலையும் பனியையும் பொருட்படுத்தாது அடியவர்கள் ஒருவர் பின் ஒருவராக நின்று நேர்த்தியாகச் சென்று எண்ணெய்க்காப்பு சாத்தியிருந்தனர்.

நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வில் வெளி ஊர்களிலிருந்தும் வெளிமாவட்டங்களிலிருந்தும் பெருந்திரளானவர்கள் வருகை தந்திருந்தனர்.

புதுப்பொலிவுடன் மிகவும் பிரமாண்ட மாக அமைக்கப்பட்டுள்ள ஆலயம் காண்பவர்களைக் கவரக்கூடிய வகையில் மிகவும் அழகாக காட்சியளிப்பதோடு இயற்கைச்சூழ லுட னும் தோற்றமளிக்கும் ஆலயச் சூழலும் மேலும் ஆலயத்திற்கு அழகு சேர்ப்பதாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ




# 100நாட்கள் வேலைத்திட்டத்திற்குள் காணாமற்போனோர் குறித்து தீர்வு?

## புதிய அரசிடம் தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் முன்மொழிய யாழில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

**புதிய அரசின் 100 நாட்கள் வேலைத் திட்டத்திற்குள் வடக்கில் யுத்த காலத்தில் காணாமற் போனவர் தொடர்பிலும் அரசியற் கைதிகளின் விவகாரம் மற்றும் தமிழர்கள் எதிர்பார்க்கும் நிரந்தர அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களை முன்மொழிவு செய்வதற் கான விசேட அரசியல் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் 4ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.**

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் என்ற தலைப்பின் கீழ் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்டகிளையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடல்தொடர்பில்அந்த அமைப்பினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்கள் எதிர்பார்த்தது போல் மாற்றம் ஒன்று உருவாகி புதிய அரசு தோன்றியுள்ளது. இந்தச் சூழ்நிலையில்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

அந்த வகையில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இடம்பெயர்ந்தமக்களின்பிரச்சினை, காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகள், பெண் தலைமைத்துவம், பெண்களின் பிரச்சினை இன்னும் பல பிரச்சினைகள் தீர்ப்பதற்காக புதிய அரசின் 100 நாட்கள் வேலைத் திட்டத்திற்குள் முன்மொழிவு செய்வதற்கும் நிரந்தரமான அரசியல் தீர்வு தொடர்பாகவும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், சமய அமைப்புக்கள், பல்கலைக்கழகத்தினர் இணைந்து எதிர்காலத்தை திட்டமிட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் முயற்சிக்கின்றது.

எமது முயற்சியில் இணைந்து கொள்ள தெற்கிலிருந்து சிவில் அமைப்பு பிரதிநிதிகள், பௌத்த பிக்குமார், பாதிரிமார்கள்வருகை தரவுள்ளனர்.

ஆகவே இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைத்து செயற்பட முன்வருமாறு அழைக்கின்றோம் என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ




## ஆசிரிய மாணவருக்கு விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் கல்விமாணி கற்கை நெறியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிராந்திய நிலையங்களில் கல்வி பயிலும் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான விசேட கலந்து ரையாடல் நாளை 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

முதலாம் வருட இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படவுள்ளமையினால் அனைத்து ஆசிரிய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ

## பிரதிஷ்டை

(கரணவாய்)

வடமராட்சி கருணையம்பதி மண்டான் ஸ்ரீ வீரபத்திரகாளி அம்மன் பிரதிஷ்டா விஞ்ஞாபன நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.15 மணி தொடக்கம் 2.30 மணி வரை இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ-60)



அமெரிக்காவின் ஹவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலவன் சுவாமிகள், ஷண்முகநாத சுவாமிகள் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு ஆன்மீக பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன்போது அவர்கள் கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடத்திற்கும் கடந்த 31 ஆம் திகதி வருகை தந்திருந்தனர். (அவர்களுடன் தொண்டுநாதன் சுவாமிகளும் உடன் வருகை தந்திருந்தார்.) ஹவாய் சுவாமிகள் வேதாந்த மடத்தில் இடம்பெற்ற ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பித்தமையை படங்களில் காணலாம்.

# குரங்குத் தொல்லைகளைக்கட்டுப்படுத்த வனஇலாகா அதிகாரிகள் யாழ்.வருகை

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் குரங்குகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்ள தென்னிலங்கையிலிருந்து வருகைதந்துள்ள வனஇலாகா அதிகாரிகள் மீசாலை பழமுதிர்ச்சோலை நிலையத்தில் முகாமிட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் குரங்குகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் குறித்து சாத்தியமான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டே அவர்கள் வருகை தந்துள்ளனர்.

குரங்குகள் நடமாடும் தகவல்களை 077 757 0280, 077 742 3510 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு வழங்க முடியும்.

அதேவேளை இன்று பிற்பகல் 2 மணிக்கு மீசாலை பழமுதிர்ச்சோலை நிலையத்தில் நடைபெறும் குரங்குகளைக் கட்டுப்படுத்த மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலில் விவசாயிகளிடமிருந்து தகவல்கள் பெறுக் கொள்ளப்பட விருக்கின்றன. (இ-29)

## மந்திரம், ஸ்தோத்ரம் ஓதும் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

தைப்பூச தினமான நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் மந்திரம், ஸ்தோத்ரம் ஓதுதல் பயிற்சிக்கான வகுப்பு சின்மயா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகளால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயின்று பயனடையலாம். பின்பு பிரதி செவ்வாய்க்கிழமை களில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணிவரை இவ்வகுப்பு ஆச்சாரியாரினால் தொடர்ந்து நடத்தப்படவுள்ளது. (இ

# கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட கழிவுகளை அகற்ற வாகனம்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசத்தில் திண்மக் கழிவகற்றும் நடவடிக்கைகளுக்கு யாழ்.மாநகர சபையினால் வழங்கப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் க.கனகதுரை தெரிவித்துள்ளார்.


யாழ்.மாநகரசபையினால் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் பழுதடைந்த நிலையில் அதனைத் திருத்தி திண்மக் கழிவகற்றும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துமாறு வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி வாகனம் திருத்தப்பட்டு கழிவகற்றல் நடவடிக்கைகளுக்குத் தயாரான நிலையில் உள்ளது. இன்னும் ஓரிரு தினங்களில் இந்த வாகனம் பயன்படுத்தப்படவுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை திண்மக்கழிவுகளை விரைவாக அகற்றும் நடவடிக்கையில் தமது பிரதேச சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.வின் மோசடிகளை அம்பலப்படுத்த சு.க.திட்டம்



(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகளை அம்பலப் படுத்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்மை விளையாட்டுப் பொருளாக நினைத்து செயற்பட்டு வருகின்றனர் எனவும் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

எங்கள் அனைவரையும் கள்வர்ளாக ஐக்கிய தேசியக் கட்சியினர் சித்திரிக்கின்றனர். எமக்கு எதிராக கடுமையான சேறு பூசல்கள் இடம் பெற்று வருகின்றன.

நாமும் அவர்களின் பைல்களை எடுத்துக் கொண்டு கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு பிரிவிற்கு சென்று முறைப்பாடு செய்ய வேண்டுமென டிலான்பெரேரா தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் இருந்தால் நீங்கள் என்ன தூங்குகின்றீர்களா அவற்றை ஊடகங்களுக்கு வெளிப் படுத்துங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதற்காகத்தான் தேசிய நிறைவேற்றுப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யுங்கள் என மேலும் தெரிவித்தார். (இ-5)

## கட்டுப்பாட்டையிழந்த கார் மின்கம்பத்துடன் மோதியது



**வேகக் கட்டுப்பாட்டை இழந்த சொகுசு கார் ஒன்று வீதியோரமாகயிருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான அதே வேளை காரின் சாரதி படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். யாழ். வல்லைவெளி வீதி மண்டான் சந்திப்பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் சொகுசு கார் தலைகீழாக கிடந்த அதேவேளை பலத்த சேதங்க ளுக்கும் உள்ளாகியிருந்தது. (இ)**

இடைக்கால பட்ஜெட்-2015

# வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பில் தாக்கம் எதையும் செலுத்தவில்லை

(யாழ்ப்பாணம்)

மைத்திரி -ரணில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு செலவுத்திட்டம் மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதையும் செலுத்தவில்லை. எரிபொருட் களுக்கு கொண்டுவரப்பட் விலைக் குறைப்புக்கள் அளவிற்கு கூட அத்தியாவசிய உணவுப் பொருட் களுககு விலைக்குறைப்புக்கள் இடம் பெறவில்லை. ஒருசில ரூபாய்களின் விலைக்குறைப்பானது வெறும் பெயரளவிலானதாகும். இது யானைப பசிக்கு சோளப்பொறி போன்றதாகும்.

மக்களுக்குக் கொடுத்த தேர்தல் கால வாக்குறுதிகளைச் சமாளிப்பதற்கும் அடுத்த பொதுத் தேர்தலை இலக்காகவும் கொண்ட கண்துடைப்பு விலைக்குறைப்புக்க ளேயாகும்.

இதுகூட 100 நாட்களுக்குரிய விலைக்குறைப்புக்களா? அல்லது அடுத்த வரவு செலவுத்திட்டம் வரையானதா?. என்பதும் கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. எனவே உழைக்கும் மக்களின் எதிர்பார்ப்பில் ஏமாற்றமே காணப்படுகின்றது.

இது இந்த அரசாங்கம் பின்பற்றி நிற்கும் நவ தாராள உலகமயமாதல் பொருளாதாரக் கொள்கைக்கான முன்னுரையாகவே அமைந்திருக்கிறது.

இவ்வாறு புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத்திட்டம் பற்றி புதிய ஜனநாயக மாக்சிக லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், சுமார் 14 இலட்சம் அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 10 ஆயிரம் இரண்டு கட்டங்களில் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பது அவர்களது வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு ஓரளவு உதவக் கூடியதாகும்.

அதேவேளை நாட்டின் சுமார 70 இலட்சம் தனியார் துறைத் தொழிலாளர்கள் ஊழியர்களுக்கு திட்டவட்டமான சம்பள உயர்வு போதுமானதாக அறிவிக்கப்படவில்லை.

சிறுதொகையான ரூபா 2 ஆயிரத்து 500 மட்டுமே பெயரளவில் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றது. இது அவர்களைத் திட்டமிட்டுக் கைவிட்டுள்ள மோசமான செயலாகும்.

இதன் மூலம் பல் தேசியக் கம்பனிகள், பெருவணிக நிறுவனங்கள், தனியார் கம்பனிகள் -நிறுவனங்களின் அப்பட்டமான சுரண்டலுக்கு மைத்திரி- ரணில் அரசாங்கம் பச்சைக்கொடி காட்டி நிற்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

அது மட்டுமின்றி சாதாரண உழைக்கும் மக்களின் அன்றாட உணவுப் பொருட்களான கோதுமை மா, சீனி, பருப்பு,மல்லி, நெத்தலி போனற வற்றிற்கான விலைக் குறைப்பு என்பது ஒருவகை ஏமாற்றாகும்.

அதேபோன்று நெல்லுக்கு உத்தர வாத விலையைக் கூட்டியுள்ள வரவு செலவுத்திட்டம் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கவில்லை. எனவே கீழ் நடுத்தர வர்க்கத்தினருக்கும் மேல் நடுத்தர வர்க்கத்தினருக்கும் விலைக் குறைப்புக்கள், சம்பள உயர்வு என்பன ஆறுதல் வழங்கியுள்ள அளவிற்கு ஏக பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்க்கைச் செலவின் சுமைக்குப் போதிய பரிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை.

குறிப்பாக பெருந் தோட்டத் துறையிலும் சுதந்திர வர்த்தக வலயங் களிலும் ஏனைய தனியார் நிறுவ்னங்களிலும் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் ஊழியர்களை இவ்வரவு செலவுத்திட்டம் உதாசீனம் செய்துள்ளது. இது தரகு முத லாளித்துவ மைத்திரி- ரணில் அரசாங்கத்தின் தொழிலாளி வர்க்க விரோத, மக்கள் விரோத நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவே காணப்படுகிறது.

எனவே ஆட்சி மாற்றத்தால் அடிப்படைப் பொருளாதார கட்டமைப்பிலும் சுரண்டல் போக்கிலும் மாற்றம் ஏற்படமாட்டாது என்பதற்கு இவ்வரவு செலவுத் திட்டம் நல்லதோர் எடுத்துக்காட்டாகும.

ஆதலால் தொழிலாள்கள், ஊழியர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் தமக்கானவற்றைப் பெற்றுக் கொள்வதற் குத் தமது கோரிக்கைகளை முன் வைத்து இன, மத, மொழி பிரதேச வேறுபாடின்றி உழைக்கும் வர்க்கம் எனும் அடிப்படையில் ஒன்றிணைந்து போராடுவதற்கு முன வருவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதையே எமது கட்சி வற்புறுத்தி நிற்கிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சகோதரர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்படுகின்றனர்-நாமல்

(கொழும்பு)

தமது சகோதரர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது இளைய சகோதரர்களான யோசித மற்றும் ரோஹித ஆகியோர் அரசியல் ரீதியாக குரோத உணர்வுடன் பழிவாங்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக சகோதரர்கள் இருவரும் கடற்படை மற்றும் இராணுவம் ஆகிய ரக்பி அணிகளில் தலைவர்களாக கடமையாற்றி வந்ததாகவும் தற்போது அவர்கள் பயிற்சியில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான காரணங்களும் அறிவிக்கப்படாது பயிற்சிகளில் ஈடுபட வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறையில் குரோத உணர்வுடன் பழிவாங்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## தைப்பூச விசேட ஆராதனை

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்ற கந்தசுவாமி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள வெற்றிவேல்முருகனுக்கு தைப்பூச தினத்தையொட்டி விசேட அபிசேக ஆராதனைகள் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து இப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக எஸ். சிவானந்தராஜாவின் பக்தி இசை விருந்தும், சொல்லருவி க. ஜெசிந்தனின் தலைமையில் சண்டிலிப்பாய் அமரிசை விவாதக் குழுவினரின் "அன்பே சிவம் என்பார்கள் அத்தகைய அன்பு நம்மவர் மத்தியில் அருகி வருகின்றது - பெருகி வருகின்றது" என்ற தலைப்பிலான விவாத அரங்கும் இடம்பெறவுள்ளது. அனைத்து அடியவர்களையும் இப் பெருவிழா வில் கலந்து கொண்டு இறைவனருள் பெறுமாறு மறுமலர்ச்சி மன்றத்தின் ஆன்மீகச் செயலணியினர் கேட்டுள்ளனர். (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி பாலசுந்தரம் பத்மாவதி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் பத்மாவதி கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு Putney Vale Crematorium, Stag Lane, London SW15 3DZ U K என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி மணிக்கவாசகர் றோசம்மா



யாழ்.உரும்பிராய் தெற்கு ஞான வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் றோசம்மா நேற்று முன் தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னா ரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 5 ஆம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் Br emgarten Friedhof, Murten Str 51,3008 Bern, Switzerlnd என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சற்குணராசா சுலக்சன்



வவுனியா தோணிக்கல்லை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணராசா சுலக்சன் கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று அகால மரணமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வவுனியா தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கந்தையா கந்தசாமி



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று காலமானார். அன் னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
மருதடியான் துணை




# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

## ஆவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சிறப்புமலர் -02.02.2015

**திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரை உள்ள சுப வேளையில் மருதடியான் கும்பாபிஷேகம்**



**பிரதம குருவின் ஆசியுரை**

மருதடியான் மெய்யடியார்களே!


அடியவர்களின் நீண்ட நாளைய எண்ணம் இன்று ஈடேறுகின்றது. ஈழத்தின் முதன்மை விநாயகராலயமாக விளங்குகின்ற மருதடிப் பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேகம் இன்று சிறப்பாக நடைபெறுகின்றது.


இந்த ஜய வருடத்தில் உத்தராயணத்தில் வளர்பிறைக் காலத்தில் புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9.45-10.45 வரையுள்ள சுபவேளையிலே மருதடி யானுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது நமக்கு மட்டுமல்ல மக்களுக்கு மட்டுமல்ல முப்பத்து முக் கோடி தேவர்களுக்கும் மகிழ்வைக் கொடுக்கின்ற நிகழ்வாக இது அமைகிறது.

பூசலார் நாயனார் மனத்தில் கட்டிய கோவில் போல் அமைந்த பொற் கோவில் இராஜகோபுரங்கள் சூழ்ந்த பெருங் கற் கோவில் உலகெங்கும் பரந்து வாழ்கின்ற மருதடியானின் மெய்யடியார்கள் கொடுத்த பெரும் செல்வம் கொண்டு சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது சிற்பிகள் செதுக்கிய கோவிலல்ல.

மருதடியானே தமக்கு வேண்டியது இக்கோவில் என எண்ணம் கொண்டார் போலும். அவருடைய எண்ணப்படி அமைந்த இக்கோவிலின் மஹா கும்பாபிஷேகத்தை காண்பதுவும் கேட்பதுவும் மிகுந்த புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதோடு மட்டுமல்ல கடந்த பத்து வருடங்களாக மெய் துஞ்சாது ஊன் உறக்கம் தவிர்த்து மருதடிக் கோவிலே தமது கோவிலாக நினைத்து பணிபுரிந்த அனைவருக்கும் மருதடியான் திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டும். எல்லா மக்களும் மருதடியான் சேவையில் இணைந்து நாம் வாழும் காலத்திலாவது நல்லதைச் செய்து சிறப்புற்று வாழ ஆசி கூறி அமைகிறேன்.

அராலியூர் சிவசிறி.சிவஸ்வாமிக் குருக்கள்
பரமேஸ்வரஜெயகுமாரக்குருக்கள்
கும்பாபிஷேக பிரதம குருவும்
ஆலய பிரதம குருவும்






**மருதடியான் அடியார்களே!**

வரலாற்றுப் புகழ்பெற்ற மருதடி ஆலயமானது மீண்டும் ஒரு சிறப்பு வரலாற்றினை தன் வரலாற்றுடன் சேர்த்துக்கொள்ள மருதடியான் துணை கொண்டு முற்றுமுழுதாக பொதுமக்க ளின் நிதிகொண்டு உள் ளூர் , தென் னிந்திய சிற்பக் கலைஞர்கள் ஆக்கத் துடன் புதுப்பொலிவு பெற்று சிற்பக் கலைகள் நிறைந்த பொற்கோவிலாக காட்சி அளிக்கின்றது.

இவ் அருள்பெரும் ஆலயத்தினை ஒருமுறையே னும் தரிசித்து பாக்கியம் பெற மக்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும் "தவமும் தவம் உடையா ர்க்கே" அதுவும் இறைவன் திருவரு ளால் மட்டுமன்றி அது நமக்கு கிட் பாது. இனிய கும்பாபிஷேகத்தில் பங்கு கொண்டு அருள்பெறும் அடியவர்க்கும் வர முடியாது வீட்டிலிருப்போருக்கும் மருதடியானை நினைக்கும் அன்பர்களுக்கும் மருதடியான் அருட்கடாட்சம் கிடைக்கவும் விழா சிறப்புறவும் எல்லாம்வல்ல மருதடியானை வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

தர்மகர்த்தாசபை

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருதின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையை தந்து உனை ஆண்ட
வித்தக மருதடி விநாயகன்
ஆலய தர்மகர்த்தா சபை.

**மலரமைப்பு:
V.கிரிதரன்
மானிப்பாய்**

**என் இனிய அடியவர்களே!**

**என் திருக்கோலம் காண நீவிர் உள் வீதி வர விரும்பின் நான் விரும்பும் இக்கோலத்தில் வந்தால் நான் உன்னை கண்டுகொள்ளவும் என்னை நீவிர் தரிசிக்கவும் இலகுவாக இருக்கும். என் இன்பமே உன் இன்பம். எனது விருப்பமே உனது விருப்பம். எனது நல்லாசிகள் உங்களை வாழ வைக்கும். எனதருள் பெற்று நீவிர் ஆலயம் வருவதை நான் விரும்புவேன்.**

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

நவகுமரன்ஸ்
மருந்துக்கடை
யாழ்.வீதி,
மானிப்பாய்.

கயானி காலணியகம்
ஆலடிச் சந்தி,
யாழ்.வீதி,
மானிப்பாய்.

திருப்பதி
தொலைத்தொடர்பு நிலையம்,
பாடசாலை உபகரணங்கள்
விற்பனை நிலையம்,
யாழ். வீதி, மானிப்பாய்.

PCs
PC SYSTEMS
Total IT Solution Providers
ஆலடி சந்தி, மானிப்பாய்.
Tel- 0212255445
Fax- 0212256261

கோல்டன் மல்ரி சொப்
மானிப்பாய் சந்தி,
மானிப்பாய்.

ஸ்ரீ சுபா பேக்கரி
சுதுமலை.

Micro System
Development Centre
Jaffna Road, Manipay
Computer Sales, Repairs, Networking & Maintenance
Showroom & Services Centre..
ஆலடிச் சந்தி,யாழ்.வீதி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானிப்பாயின் மன்னவனே**

மருதடி மருக்கொழுந்தே
மணம்வீசும் மல்லிகையே
மானிப்பாயின் மன்னவனே
எம்தமிழர் துயர்தீர்த்த இனிய கணபதியே
இன்று உனக்கு குடமுழுக்கு
இனி எமக்கு வாழ்வில் வசந்தம்

**து.சரவணபன்**

**தானாய் மாறிடுமே**

ஆவணி சதுர்த்தியில் அவதரித்தே
அறுகும் எருக்கும் அலங்கரிக்க
அப்பமொடு மோதகமும் முக்கனியும்
படையிலேற்று பூதகணங்களின்
தலைவன் எலிவாகனனே
குட்டிக்கொண்டேதோப்புக்கரணமும்
குறைவின்றி உன்நாமம் சொல்லியே
வழிபடுவோம் என்றும் எம்வாழ்நாளிலே
நீதிக்கு கூட நிதி கொடுத்தால் நிலை
தடுமாறிபொய் சொல்லுமே
நின்னருள் ஒன்றே போதும் இந்நிலை
தானாய் மாறிடுமே

**பரமநாதன்**

**வீற்றிருந்து வரமருளும் மருதடி விநாயகர்**

மாற்றநறு மலர்கள் மலர்ந்து மணம்பரப்ப
மாண்பொடு மங்கலம் துளிர்விட
ஏற்றமுற எமக்கு என்றும் உதவிடும்
எழில்மிகு மானிப்பாய் மருதடிவிநாயகரே
வீற்றிருந்து வரமருள மஹாகும்பாபிஷேகத் துடனின்று
வேதநெறிமுறைச் சிறப்புக் களுடனே
ஆற்றல் அமைதி அடியார்கள் பெற்று
ஆனந்த மடையவழி காட்டுவீரே

**க.அருமைநாயகம்**

# அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான தடைகள் அரசாங்கத்தால் நீக்கம்

(கொழும்பு)

இலங்கையில் அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படமாட்டாது என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. இதனையடுத்து அந்த அமைப்புக்கள் கருத்தரங்குகள் உட்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள். பிரதமரின் செயலாளரை சந்தித்து கலந்துரையாடிய போது இதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இதில். அரசசார்பற்ற அமைப்புக்கள். இலங்கையின் நீதியமைப்புக்குள் தமது பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)


# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச தின உலகப் பெருமஞ்ச திருவிழா





காலம்:-03.02.2015
செவ்வாய்க்கிழமை
காலை 6.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் பூசை இடம்பெறும்
மாலை 6 மணிக்கு சாயரட்டை பூஜை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை இடம்பெறும்.
இரவு 7 மணிக்கு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நூற்றாண்டு பழமை வாய்ந்த உலகப் பெருமச்சத்தில் எம்பெருமான் வீதி வலம் காட்சி இடம்பெறும்.

**இந்நிகழ்ச்சி ஓம் TV யினூடாக நேரடி ஒளிபரப்பும் இடம்பெறும்.**

**அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(9403) தர்மகர்த்தா சபை.


# பேசும் படம் - 14



கனகபுரம்- உருத்திரபுரம் பாலம்

**பள்ளிப் பாலகி பாலத்தைக் கடக்கப் படும்பாடு**

**அனுப்பியவர்:** திருமுரளி பானுசன் பாரதிபுரம்

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.
மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 12 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/4086 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 47 3/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/295 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 20 1/2 செவ 12இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/4088 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார்<br>தொ.இ: G/298 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 6 3/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் MSCபொறியியலாளர்<br>தொ.இ: B/4090 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 19 1/2 செவ 12இல உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/299 |
| பிறப்பு: 1987 இந்து<br>நடசத்திரம்: சித்திரை<br>கி.பா: 24 1/2 சூரிசெவ் 11 இல<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4091 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 22 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/304 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible] கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1058

## நூற்றுக்கு நூறு

ஒரு கிராமத்தில் பாவெல், பியோதர் என்ற இரண்டு பேர் வசித்தார்கள். பாவெலுக்குக் குதிரைகள் மிகவும் பிடிக்கும். உலகத்திலேயே பெரிய செல்வம் குதிரைகள்தான் என்பது அவன் எண்



ணம். ஆனால் இந்த உலகத்தில் மிகப்பெரிய செல்வம் நண்பர்களே என்று சொல்வான் பியோதர். இந்த விடயம் குறித்து இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் நடக்கும். இறுதியில் வெளிநாடுகளுக்குச் சென்று குதிரைகளையும் நண்பர்களையும் சம்பாதிப்பது என்று அவர்கள் முடிபு செய்தார்கள். ஒருவருட காலம் அவர்கள் வெளிநாடுகளில் சுற்றி அலைந்து குதிரைகளையும் நண்பர்களையும் சம்பாதித்துத் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பினார்கள்.

பாவெல் கேட்டான்; நீ எத்தனை நண்பர்களைச் சந்தித்தாய்?

நான் 99 நண்பர்களைச் சந்தித்தேன் என்ற பியோதர் நீ எத்தனை குதிரைகளைச் சம்பாதித்தாய்? என்று கேட்டான்.

நான் 99 குதிரைகளைச் சம்பாதித்தேன். இன்னும் ஒன்று கிடைத்தால் என்னிடம் 100 குதிரைகள் இருக்கும் என்றான் பாவெல்.


அதைக் கேட்டு பியோதர், ஒரு காரியம் செய்யலாம். என் குதிரையை உனக்குக் கொடுக்கிறேன். அப்போது உன்னிடம் 100 குதிரைகள் இருக்கும் என்றான்.

பாவெலுக்கு மகிழ்ச்சி. அவன் சொன்னான் அப்படி என்றால் நீ சம்பாதித்த 99 நண்பர்களுடன் நானும் சேர்ந்தால் உனக்கு 100 நண்பர்கள் இருப்பார்கள் அல்லவா?

அவன் சொன்னதை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டான் பியோதர். வீட்டுக்குச்சென்ற பாவெல், தன் அம்மாவிடம் அம்மா, என் கனவு நினைவாகிவிட்டது. எனக்கு இப்போது சொந்தமாக 100 குதிரைகள் உண்டு என்றான்.

அதைக்கேட்டு அவன் அம்மாவும் மகிழ்ந்தார். அதே நேரம் பியோதரும் தன் அம்மாவிடம் இப்படிச் சொன்னான்.

அம்மா நான் 100 நண்பர்



களைச் சம்பாதித்தேன்.

அதற்கு அம்மா 100 நண்பர்கள் இருப்பது நல்லதுதான். ஆனால், அவர் ள் ஆத்மார்த்தமான நண்பர்களா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியா?

ஆமாம் நீ இப்போதே சந்தைக்குச் சென்று உன் சொத்துக்களை இழந்து விட்டாய் என்றும் வாழ்வதற்கு வழி இல்லை என்றும் சொல். அப்போது உன் நண்பர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம்? என்றார். பியோதர் தன் அம்மா சொன்னது போலவே செய்தான். அதேநேரம் அன்றிரவு பாவெல் வீட்டுக்குத் திருடர்கள் வந்தார்கள்.

அவர்கள் 100 குதிரைகளையும் திருடிச்சென்று விட்டனர். மறுநாள் காலையில் பாவெலுக்கு திருட்டுப் போன விடயம் தெரிந்தது. அவன் பல இடங்களிலும் அலைந்து தேடியும் குதிரைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பினான்.

அம்மா, எனக்கு ஒரு நாள் மட்டும்தான் மகிழ்ச்சி கிடைத்தது. இப்போது இந்த உலகத்தில் மிகவும் துயரமானவன் நான் தான் என்று அம்மாவிடம் வருத்தப்பட்டான்.

அதைக்கேட்டு அவன் அம்மாவும் வருந்தினார். இந்த நேரத்தில் பிரியோதரின் வீட்டில் என்ன நடந்தது? அதிகாலையிலேயே பியோதரின் நண்பர்கள் பணமும் உடைகளும் உணவுப் பொருட்களும் எடுத்துக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்தார்கள். கொண்டு வந்த பொருட்களை பியோதரிடம் கொடுத்து நண்பா, நாங்கள் இருக்கும்போது நீ எதற்கும் கவலைப்பட வேண்டாம். உனக்கு நாங்கள் உதவுகிறோம் என்றார்கள். அதைக்கேட்டு மகிழ்ந்தார் பியோதரின் அம்மா. நண்பர்கள் எல்லோரும் விடைபெற்றுச் சென்ற பிறகு அவர் சொன்னார். மகனே உனக்கு கிடைத்திருக்கும் நண்பர்கள் எல்லோரும் உண்மையான நண்பர்கள்தான். நீ ஆபத்தில் இருப்பதை அறிந்தவுடன் உதவி செய்ய வந்துவிட்டார்கள். அதன் பிறகுதான் பாவெலின் குதிரைகள் திருட்டுப்போன விடயம் பியோதருக்குத் தெரிந்தது. உடனே அவன் பாவெல் வீட்டுக்குச் சென்றான்.

தன் நண்பர்கள் கொடுத்த பணத்தையும் மற்ற பொருட்களையும் பாவெலுக்குக் கொடுத்தான். நண்பனே, இழந் ததை நினைத்து வருந்தாதே. இவற்றைக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்திரு. நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பவர்கள் வாழ்க்கையில் எப்போதும் கஷ்டப்பட மாட்டார்கள் என்றான்.

எனக்கு எல்லாம் புரிந்தது. உலகில் உள்ள எந்தச் செல்வத்தையும் விட மேலான செல்வம் நண்பர்கள் தான்! என்றான் பாவெல். பிறகு அவர்கள் ஆழ்ந்த நட்புடன் வெகு காலம் வாழ்ந்தார்கள்.

02.2015
02

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1509 - போர்த்துக்கல்லுக்கும் துருக்கிக்குமிடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.
- 1790 - வீரபாண்டிய கட்டபொம்மன் 47 ஆவது பாளையக்காரராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
- 1812 - கலிபோர்னியாவின் கரையோரங்களில் ஃபோர்ட் ரொஸ் என்ற இடத்தில் தோல் வர்த்தக குடியேற்றமொன்றை ரஷ்யா அமைத்தது.
- 1822 - இலங்கையின் ஆளுநராக சேர் எட்வேர்ட் பஜெட் நியமிக்கப்பட்டார்.
- 1848 - மெக்சிக்கோவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.
- 1848 - கலிபோர்னியாவில் தங்கம் தேடுவதற்காக சீனர்கள் கப்பலில் சான் பிரான்சிஸ்கோ வந்திறங் கினார்கள்.
- 1880 - முதலாவது மின்சார வீதி விளக்குகள் இந்தியா வில் நிறுவப்பட்டன.
- 1897 - பென்சில்வேனியாவின் தலைநகர் ஹரிஸ்பேர்க் தீயினால் அழிந்தது.
- 1899 - ஆஸ்திரேலியாவின் தலைநகரை சிட்னிக்கும் மெல்பேர்னிற்குமிடையில் கன்பராவில் அமைப்பதென முதலமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
- 1901 - விக்டோரியா மகாராணியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.
- 1908 - 60 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும் இந்துக்களின் சிறப்பு நாளான அருத்தோதயம் நிகழ்வு.
- 1920 - எஸ்தோனியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1933 - ஜேர்மனியின் நாடாளுமன்றத்தை ஹிட்லர் கலைத்தார்.
- 1946 - ஹங்கேரியக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1972 - டப்ளினில் பிரித்தானிய தூதரகம் தேசியவாதி களால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 1989 - ஒன்பது ஆண்டு கால முற்றுகையின் பின்னர் கடைசி ரஷ்யத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தா னில் இருந்து வெளியேறின.
- 1989 - செய்மதித் தொலைக்காட்சிச் சேவை ஸ்கை தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1522 - லியூஜி ஃபெறாரி, இத்தாலியக் கணித ஆய்வாளர் (இ. 1565)
- 1871 - பா. வே. மாணிக்க நாயக்கர், அறிவியல் தமிழ் வளர்த்த தமிழறிஞர் (இ. 1931)
- 1882 - ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர் (இ. 1941)

### இறப்புகள்

- 1907 - திமீத்ரி மென்டெலீவ், ரஷ்ய வேதியியலாளர் (பி. 1834)
- 1970 - பேட்ரண்ட் ரசல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1872)
- 1980 - வில்லியம் ஸ்டெயின், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)
- 1987 - அலிஸ்ரர் மக்லீன், ஆங்கில எழுத்தாளர (பி. 1922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

...ரஜினிகாந்த் நடித்த முக்கிய படங்களில் ஒன்று "முரட்டுக் காளை." இதில் அவர் கதாநாயக னாகவும், ஜெய்சங்கர் வில்லனாக வும் நடித்தனர்.

பட உலக நிலவரம் சரி இல் லாமல் இருந்ததால், ஏவி.எம். நிறு வனம் சில காலம் படத் தயாரிப்பை நிறுத்தி வைத்திருந்தது. 1980இல் அவர்கள் மீண்டும் படத்தயாரிப் பில் ஈடுபட முடிவு செய்தனர். கதா நாயகனாக நடிக்க ரஜினிகாந்தை ஒப்பந்தம் செய்தனர்.

இதற்கான கதை-வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார். இளையராஜா இசை அமைக்க, எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய் தார்.

### வில்லன் ஜெய்சங்கர்

ஒரு கிராமத்தில், பண்ணை யாருக்கும், ஏழை விவசாயிக்கும் நடக்கும் போராட்டத்தை மைய மாக வைத்து பின்னப்பட்ட கதை. கிராமியக் கதையாக இருந்தா லும், பொழுதுபோக்கு அம்சங்களை நிறைய சேர்த்து படத்தை பிர மாண்டமாகத் தயாரிக்க ஏவி.எம். முடிபு செய்தது.

படத்தில் ஒரு புதுமையாக, ஜெய்சங்கரை வில்லனாக நடிக்க வைக்க தீர்மானிக்கப்பட்டது. அது வரை ஏராளமான படங்களில் கதா நாயகனாக நடித்து, தமிழ்ப்பட உலகின் முக்கிய ஹீரோக்களில் ஒருவராக ஜெய்சங்கர் திகழ்ந்து கொண்டிருந்தார்.

வில்லன் வேடத்தில் நடிக்க அவர் முதலில் தயங்கினார். எனி னும், அவர் வேடம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், வலுவானதாக வும் இருந்ததால் நடிக்க சம்மதித் தார்.

### காளைச் சண்டை

இதில் விவசாயி காளையனாக ரஜினியும், பண்ணையார் மக னாக ஜெய்சங்கரும் நடித்தார்கள்.

பண்ணையாரின் முரட்டுக்கா ளையை காளையன் அடக்குவான்.



முரட்டுக்காளை ரஜினி-ஜெய்சங்கர் மோதல்

## கதாநாயகன்-ரஜினி வில்லன்-ஜெய்சங்கர்

அவனுக்கு தன் மகளை திரும ணம் செய்து கொடுப்பதாக ப்பண் ணையார் அறிவிப்பார். ஆனால், காளையன் மறுத்துவிடுவான்.

இந்த மோதல் காரணமாக அடுக்கடுக்காக நடை பெறும் சம்பவங்களால, படம் விறுவிறுப்பாக அமைந்தது.

படத்தின் உச்சகட்டமாக, ஓடும் ரெயில் மீது ரஜினிக்கும், ஜெய்சங் கருக்கும் நடக்கும் சண்டை மயிர் கூச்செரியும் விதத்தில் படமாக்கப் பட்டிருந்தது. பட அதிபர் ஏவி.எம். சரவணன் உள்பட பலர் கேட்டுக் கொண்டும், ரஜினி "டூப்" போட்டுக் கொள்ள மறுத்து, சண்டைக் காட்சி களில் அவரே துணிகரமாக நடித் தார்.

இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக ரதி நடித்தார். மற்றும் சுமலதா, ஒய்.ஜி.மகேந்திரன், சுருளிராஜன், அசோகன், தேங் காய் சீனிவாசன் ஆகியோரும் நடித்தனர்.

கதை, நடிப்பு, இசை அனைத் தும் சிறப்பாக அமைந்தன.

20-12-1980 இல் வெளி வந்த இந்தப்படம், 150 நாட்களுக்கு மேல ஓடி சாதனை புரி ந்தது.

### சரவணன் அனுபவம்

ரஜினி பற்றி யும், "முரட்டுக் காளை" படத்தை தயாரித்தபோது ஏற்பட்ட அனுப வம் பற்றியும் பட அதிபர் ஏவி.எம். சரவணன் கூறி யதாவது:-

"சுமார் 25 வருடங்களுக்கு மேலாக எனக்கு ரஜினி பழக்கம். அவர் எதையும் வெளிப்படையாகப் பேசிவிடுபவர். நான் உண்மையே பேசி பழகிவிட்டேன். இந்தப் பணம், புகழ், பெயர் வந்திட்டா, பொய் பேச வேண்டிய நிலைமையும் வந்தி டும். சாப்பாட்டுக்கே வழியில்லாது கஷ்டப்பட்ட காலத்திலேயே உண்மை பேசிவிட்டு, வசதியான வாழ்க்கை அமைந்தபின் இப்போது பொய் பேச மனதுக்குப் பிடிக்கவில்லை. இனிமே வாழப் போறது கொஞ்ச நாள், அதுவரைக்கும் பொய் பேசாமலேயே இருந்துவிடலா மேன்னு தோன்றுகிறது என்று என்னிடம் அவர் கூறியதுண்டு.

அதுமட்டுமல்ல. வழக்கமாக சினிமா உலகில் எல்லாருமே கால்ஷீட் விடயங்களைக் கவனித் துக் கொள்ள ஓர் உதவியாளரை வைத்துக் கொண்டிருப்பார்கள். விருப்பம் இல்லாத விடயங்களைத் தட்டிக்கழிக்கவும், , தவறு நேர்ந்து விட்டால் பழியைப் போட்டு விட்டு நழுவவும், அந்த உதவியாள ரைப் பயன்படுத்திக் கொள்வார் கள்.

ஆனால், ரஜினி இந்த விடய த்தில் நேர் எதிர். மற்ற விடயங் களைக் கவனித்துக்கொள்ள உத வியாளர்கள் இருந்தாலும், கால் ஷீட் விடயத்தைத் தானே நேரடி யாக கவனித்துக் கொள்வார்.

ஒரு தயாரிப்பாளருக்கு திகதி களை முடிபு செய்துவிட்டால், தானே அதைக் கைப்பட எழுதிக் கையெழு த்திட்டு சம்பந்தப்பட்ட வரிடம் கொடுததுவிடுவார். எக்கா ரணம் கொணடும் கொடுத்த திகதியை மாற்ற மாட்டார்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 65

....உலகத்திலயே பெரிய சோகம் கண்ணீர் வராம அழுகிறதுதான். அந்தக் கிளவிக அழுக முடியாம அழுகிறதப் பார்த்தா அழுகையே வந்துரும் அழுதறியாத ஆளுக்கும்.

காளையன் கெழவன் கடைசி மக-கோம்பையில வாக்கப்பட்டவ என் னப் பெத்த அப்பேன்னு தலைய விரி ச்சுப்போட்டு நெஞ்சில அடிச்சு அழுது வர்றா.

செயிக்கிற சீட்டு வந்து சேரலை யேன்னு பெருங்கொண்ட சோகத்திலி ருந்த காளையன் கெழவன் மகன் சீட்டை எறிஞ்சிட்டுத் திண்ணைய விட்டு மாளார்ன்னு எந்திரிச்சு நாச மாப் போகன்னு அப்பன மண்ண வாரித் தூத்திட்டுப் போன கழுத... இப்ப என்ன நெஞ்சில அடிச்சு நீலி மாதிரி அழுது வாரவன்னு சொல்லி விட்டான் ஒரு அறை.

ஒப்புச் சொல்லி அழுது வந்த ஒரே ஒருத்தியும் ஓஞ்சுபோனா.

ஏ சொக்கத்தேவன்பட்டிப் பொம்ப ளைகளா.

நீங்க மட்டும் அழுங்களா.

ஒரு சாராயச் சத்தம் போட்டு சீட்டு வெளையாடப் போயிட்டான்.

"காக்கா பறக்காத
கள்ளிக் காட்டு பூமியில
கர்ணன் வந்து பெறந்தீரே
காளையனார் ரூபத்துல"
"ஊரெல்லாம் அன்னமிட்டு
உறவுக்குக் காசு தந்து
எமனுக்குத் தானமிட
ஏறிட்டீரோ பூந்தேரு?"

ரங்கம்மா இட்டுக்கட்டி மொதவரி பாட முக்குறுணி ரெண்டாம் வரியில கூட இருளாயி கருவாச்சி ரெண்டு பேரும் பின் பாட்டுல சேந்து பின்னி எடுக்குறாக.

இல்லாத கீர்த்தியெல்லாம் பாட்டுல கேக்கக் கேக்க சாவு ஆசை வருது கேட்டுக்கிட்டிருந்த கெழடுகளுக்கு.

பொழுதிருக்கப் பொணந் தூக்கியா ச்சு.

நாலு பொம்பளைகளுக்கும் இம்பு ட்டுக் கூலியாகும்ன்னு தெரிஞ்சிருந்தா மண்டையப் போட்டிருக்க மாட்டாரு கெழவன்.



செத்துப் போனதனால இப்பத் தெரிய வும் போறதில்ல.

தெரிஞ்சா வேகாம வெறச்சே கெட ந்திருக்கும் நெஞ்சுக்கூடு.

பொழுதோட பொழுதா ஊரு போய்ச் சேந்திரலாம்ன்னு பொம்ப ளைக நாலு பேரும் புறப்பட்டா.

ஆலமரத்தத் தூக்கி அங்கிட்டு வைக்கிற மாதிரி அடிக்குது காத்து.

காத்துன்னாகக் காத்து கடுங்க காத்து. கல்லுகளப் பேத்து ஆளுக மேல எறியிற காத்து.

இந்தக் காத்துல போனா ஊரு போய்ச் சேர மாட்டீக. இருந்து விடியப் போங்கன்னு சொல்லீட்டாக எழவு வீட்டு ஆளுக.

சோளச் சோறும் மொச்சப் புளிக் குழம்பும் பசிக்கு ருசியா இருந்துச்சு. ஆத்தாகிட்டச் சொல்லாம வந்துட் டமே நெனப்பு நெஞ்சுக்குழிய அறு க்க ராத்திரியெல்லாம் கண்ணு மூடா மக் கெடந்தா கருவாச்சி.

விடிய விடிய அடிச்ச காத்து விடி ய்ய ஓஞ்சு போச்சு. நடந்தா-

ஒத்தையடிப் பாதை மண்ணு மூடிக் கெடக்கு.

வாரப்ப மழைக்கு ஒதுங்குன வேப்பமரம் என்னிய அடையாளம் தெரியலையான்னு குறுக்கொடிஞ்சு நிக்கிது. பாதிக்கெணறு மேடாகிப் போச்சு கெணத்துமேடு சரிஞ்சு.

கடுங்காத்து தூக்கி எறிஞ்சதுல தோல் மாதிரி தொங்கிக் கெடக்கு வேலி முள்ளு மேல ஒரு வெள்ளாங் குட்டி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் மணற்காடு கும்பநாயகி

# கும்பாபிஷேகப் பெருவி



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான ஆதிபராசக்தி ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளாக காரைநகர் மணற்காட்டிலே எழுந்தருளி அருள் பாலித்து வருகிறாள். காரைநகர் மக்கள் ஆன்மீகப்பற்று மிக்கவர்கள். ஆலயங்களைப் புதுப்பித்து கட்டுவதிலும் நித்திய நைமித்திய பூசைகளைக் குறைவறச் செய்விப்பதிலும் வல்லவர்கள். அவர்கள் அள்ளிக் கொடுத்த நிதியினால் அம்பிகைக்கு அழகான நான்கு பக்கங்களிலும் கோபுரங்களைக் கொண்ட ஆலயம் அமைந்து விட்டது. இவ்வன்பர்களும் இங்கு வாழும் மக்களும் பூர்வ புண்ணியம் செய்தவர்கள். இன்றைய கும்பாபிஷேகப் பெருவிழா சிறக்க அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். அனைவருக்கும் முத்துமாரி அம்பாள் கருணை புரிய வேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாறப் பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**



## "என் கடன் பணி செய்து கிடப்பதே"

அப்பர் பிரானின் அருள் வாக்கால் மானுடப் பிறவியில் என் பாதம் பணிந்த அப்பர் நற்குடியில் நோய் நொடி இன்றி நாம் எடுத்த பிறவி சிவப்பணி செய்யும் நன் மனதை ஆன்ம ஈடேற்றத்தை கருதி ஆத்மார்த்தத்துடன் பரார்த்தமாக ஸர்வே ஜனா சுகினோ பவந்து என்று தம்மை வழிபடும் ஆன்மாக்களை வினைப்பயன் கொண்டு பஞ்சகிருத்திய திருவிளையாடலில் உலகம் உய்ய ஆன்மாக்களை சீவன் முத்தர்களாக திருவடியே சரணம் அனைத்தும் கொள்ளும் திருவருளே வழிபடும் சமயத்தின் முடிவுமாகும்.

புண்ணிய பதியில் திருவருள் நிறை காரைக்காலில் மணற்காடு என்றும் திவ்ய ஷேத்திரத்தில் எழுந்தருளி அருளாசி செய்யும் கும்பநாயகி என்னும் ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் காண்பதை எண்ணும் போது என்ன புண்ணியம் செய்தோம் என நினைந்துருகும் அம்பிகை அடியவர்களுள் ஒருவனாக எமக்குக் கிடைத்த பூர்வ புண்ணிய பலனை நினைத்து 33 குண்டங்கள் அமைத்த உத்தம மோத்தம் மகாசாந்தியக்கும் எம்மையும் வேத ஆகம சாஸ்திர ஞான தவ சிரேஷ்டர்கள் நம்மவர்கள் முப்போதும் திருமேனி தீண்டி அர்ச்சிக்கும் நாளும் பொழுது இடையறாது ஆலய குருமணியின் தவப்பேறு பெரும் பாக்கியம். ஆலய நிர்வாகத்தினர் சிவப்பணியே தவப்பணி என குடமுழுக்கே பணியென விழையும் அழகுற அமைத்துத்தந்த தேவதச்சன் என போற்றும் சிற்பிகளும் கும்பாபிஷேக பெருஞ்சாந்தியினை தரிசிக்கும் பேறு பெற்ற அடியவர்களுக்கும் தாம் பிறவிப் பயனை பெற்று தாமேயாகி வளர்த்தனை போற்றி என்று நாளும் பொழுதும் போற்றி வணங்கி நித்திய நைமித்திய காமிக உற்சவத்தினை சிறப்புற நடத்தி கலை வண்ணம் சிறப்புற்று புனிதத்துவம் பேணி ஆலயங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. இவ்வாலயங்களில் அருள் நிறைந்த அம்பிகையின் திருத்தலம் இன்று அடிகொளிரும் ஆலயமாக மிளிர்கிறது. இவ்வையகம் போற்றும் அம்பிகையை போற்றி மாறா அரனுக்கு அருளியதால் மாரி என்றும் கும்பத்தில் அமைத்து கும்பநாயகியை வழிபடும் முத்துமாரி அவர்களின் திருவருட் கடாட்ஷம் சூர்ய சந்திரர்கள் உள்ளவரை பிறந்து தர்ம நிலைக்கு குடி மக்கள் உயர கோன் உயர வரப்புயர மாரி தவறாது செழிக்க அன்னை கும்பநாயகி மகா முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

**ஸாகித்திய சிரோமணி சிவஸ்ரீ வை.மு.ப.முத்துக்குமாரசாமி சிவாச்சாரியார்,**
**கும்பாபிஷேக பிரதம குரு.**





## பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வாணினும் நனி சிறந்தனவே

நான் சிறுபராயத்தில் தவழ்ந்து நடந்து திரிந்த காலம் முதலாக வழிபட்டு வரும் எனது குல தெய்வம் மணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்கு ஆலய திருப்பணி வேலைகள் நடைபெறவுள்ளதாக இணையத்தளத்தின் ஊடாக அறிந்து கொண்டேன். அன்று முதல் அம்பிகைக்கு ஓர் இராஜகோபுரம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உருவாக அம்பிகையின் திருவருள் கைகூடியது.

அன்றைய தினத்தில் இருந்து இன்றுவரை நான் எதிர்பார்த்திருக்காத அளவிற்கு அழகு மிளிரும் கலைக்கூடமாக அம்பிகை[illegible]ன் ஆலயம் அமைவதற்கு வேண்டிய திருப்பணி வேலைகளில் பெரும்



## கும்பநாயகியின் கும்பாபிஷேகம் நடைபெற குவலயத்தில் மகத்துவமான வாழ்வு அமையும்!

காரைநகர் திருமணற்காடு திருவருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்கு இன்று குடநீராட்டு பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அண்டத்தையும் பிரபஞ்சத்தையும் கட்டி ஆளுகின்ற அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகியுமான அம்பிகையின் வழிபாடு மிகவும் தொன்மையானது. தெய்வத்தைப் பெண்ணாகவும் பெண்ணைத் தெய்வமாகவும் போற்றிய உயர் பண்பு சைவத் தமிழ் மக்களுக்குரியது. தமிழ் மக்கள் தங்களுடைய நாட்டைத் தாய்நாடு என்றும் தங்களின் மொழியை தாய் மொழியென்றும் ஓடும் நதிகளையும் பூமியையும் தெய்வமாக வழிபட்டனர். தாயின் சிறப்புப்பற்றி புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள் அழகாக எடுத்து இயம்பியுள்ளன. வேண்டும் வரமனைத்தும் தருபவள் அம்பிகை. இத்தகு மகத்துவ சிறப்புக்களை கொண்ட நாயகி காரைநகரிலே ஈழத்து சிதம்பரம் சிவத்தலமாக இருப்பதுபோல மணற் காட்டிலே சக்தியின்மையமாக மணற்காடு கும்பநாயகியின் தலம் அமைந்திருக்கின்றது. நீண்ட வரலாற்று மகத்துவ மேன்மைச் சிறப்புக்களை கொண்ட தலமாக அம்பாளின் ஆலயம் விளங்குகிறது.

## "நிதி மிகுந்தவர் பொற்குவைதாரீர் நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருள்வீர்"

என்றமகுடவாசகங்களுக்கு இருப்பிடமாகதிகழ்வது காரைநகர். அந்தவகையில் திருப்பணிச்சபையினரின் அளப்பரிய முயற்சியால் பஞ்சதளங்களோடு கூடிய திருத்தலமாக புனரமைக் கப்பட்டு குடநீராட்டு விழா மிகச் சிறப்புக்களை பெருக்கி நடைபெறுகின்றது. கும்பாபிஷேகமென்பது புதிய கோவில் கட்டப் பெற்ற போதும் பழைய கோவில்களைப் புதுப்பிற்கும் போதும் நடை பெறும் திருவிழா. புனித நீரை கும்பங்களிலிருந்து குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் இராஜகோ புரம், விமானம் ஆகியவற்றில் அபிஷேகம் செய்வது இத்திருவிழாவின் முக்கியமான கட்டம். அந்த வகையில் காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் பஞ்ச தலங்களோடு வானுயர எழுந்து காட்சியளிக்கும் இராஜகோபுரத்துடன் கூடிய திருக்கோவிலில் நடைபெறும் பெருஞ் சாந்திமிக்க விழா உலகில் அமைதியான சமாதானம் மிக்க சுபீட்சமான நல்வாழ்வைத்தர அன்னையை பிரார்த்தித்து மகிழ்வோமாக.

**ஓம் சக்தி ஓம்**

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன், ஆசிரியர், பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம். (உலக சைவ திருச்சபை யாழ்.மாவட்ட சைவத்துறைத் தலைவர்)**


**S.P.நாகரட்ணம் அன்.கோ.**
**யாழ்ப்பாணம்.**

**கஜமுகன் காட்வெயர்,**
**யாழ்ப்பாணம்.**

**S.T. பரமேஸ்வரன் ரேடர்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**


**கணேசன் ஸ்ரோர்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**


**V.M.ரெக்ஸ்ரைல்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி அம்மன் ஆலய

# ழா- 02.02.2015





கதியை நிறைவேற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமையை ட்டு அம்பிகையின் திருவருளை எண்ணி வியந்து நிற்கின் றன்.

என்றுடன் இணைந்து அம்பாளின் திருப்பணிக்கு நிதி உதவிய அன்பர்களை நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன். நிதி உதவி டைத்தால் மட்டும் போதாது. திருப்பணி வேலைகளை நின்று வனிக்க ஆள் வேண்டும். அம்பாளின் திருப்பணிக்கு செயல் டிவம் தந்த தம்பி கணேசபிள்ளை பாலச்சந்திரனையும் அவரு ன் இணைந்து செயற்பட்ட திருப்பணிச்சபை உறுப்பினர்கள் மற் ம் பெறுநர் அவர்களுக்கும் நன்றி பாராட்டி அடியார்கள் அனைவ க்கும் அம்பிகையின் அருள் வேண்டி பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**திரு சுப்பிரமணியம் கதிர்காமநாதன்**
**கோவளம் காரைநகர்.**

## தேவஸ்தான பிரதம குருவின் அருளாசியுரை



வட இலங்கையில் யாழ்ப்பாணம் காரைநகர் மணற்காடு திருப்பதியில் கடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கோயில் கொண்டு எழுந்தருளிய அருள்மிகு கும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். காரைநகரில் இவ் ஆலயம் மிகச் சிறப்பான முறையில் திருப்பணி வேலைகள் நிறைவுறச் செய்த அம்பாளின் திருவருளை எண்ணி வியந்து நிற்கின்றேன். அம்பாளின் திருப்பாதங்களை பூஜிப்பதற்கு பரம்பரை பரம்பரையாக எனக்கும் ஒரு வரத்தை தந்திருக்கிறாள். எனது பாசமிகு தந்தையார் சதாசிவ ஐயர் நாகமுத்து ஐயர் 41 வருடங்களாகவும் அடியேன் கடந்த 46 வருடங்களாகவும் அம்பாளுக்கு பூஜை செய்து வருகிறேன். அதிகாலை 5 மணிக்கே ஆலய கண்டாமணி ஒலிக்கும். பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். உள்ளூரில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் அம்பிகையின் மஹோற்சவம் காண பெருமளவு அடியார்கள் ஒன்று கூடுவர். இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்திலும் அலையென அடியார் கூட்டம் திரண்டிருப்பதை காண ஆனந்தமாக இருக்கிறது. இந்த ஆலயம் உருவாவதற்கு காரணமாக இருந்த அன்பர்கள், தொடர்ந்து நித்திய நைமித்திய மஹோற்சவக் கிரியைகளை செய்து வரும் அடியார்கள் இவ்வாலயத்தை இவ்வளவு சிறப்பாக அமைக்க பணவுதவி, பொருளுதவி வழங்கிய அம்பிகையின் அடியவர்கள் இன்றைய திருப்பணிச்சபையின் மற்றும் கும்பாபிஷேக தரிசனம் காணவரும் அடியார்கள் அனைவரும் அம்பிகையின் அருள்பெற்று நலத்துடன் பெருவாழ்வு வாழப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**சிவப்பிரம்ம ஸ்ரீ நா.ஞானசம்பந்த சிவாச்சாரியார்**
**தேவஸ்தான பரம்பரைக்குரு, தேவ உபாசகர்.**



காரைநகர் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். கடந்த பல வருடங்களாக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பெறுநர் என்ற வகையில் இந்த ஆலயத்துடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு இன்று மிகப்பிரமாண்டமான அளவில் திருப்பணி வேலைகள் நிறைவுற்று ஆலயம் பக்திபூர்வமாக காட்சி தருவது மனநிறைவையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் தருகிறது. அம்பிகையின் திருப்பணிக்கு வாரிவழங்கிய இவ்வூர் மக்களின் ஆன்மீக ஈடுபாட்டையும் பக்தி உணர்வையும் கண்டு வியந்து நிற்கின்றேன். ஆலய பிரதம சிவசாரியார் ஞானசம்பந்தக் குருக்கள் சிறப்பான முறையில் பூஜை வழிபாடுகள் செய்து வருகின்றார். திருப்பணிக்கு பேருதவி புரிந்த அன்பர்களுக்கும் அடியவர்களுக்கும் அன்னையின் திருவருள் கிடைக்க வேண்டிய பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**வே.நடராசா தலைவர்(பெறுநர்). திருப்பணிச்சபை.**

## திருப்பணிச்சபை செயலாளரின் உள்ளத்திலிருந்து...



ஈழ மணித்திருநாட்டின் மகுடம்போல் விளங்கும் யாழ்.நகரின் மேற்கே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியான காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் உட்பட பல்வேறு ஆலயங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. இவ்வாலயங்களில் அருள் நிறைந்த அம்பிகையின் திருத்தலம் இன்று அடி கொளிரும் ஆலயமாக மிளிர்கிறது. 10.02.2014 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட இவ்வாலயம் 02.02.2015 இன்று திங்கட்கிழமை ஒருவருடம் நிறைவடைவதற்கு முன்பாக மிகக்குறுகிய காலத்தில் இவ்வளவு திருப்பணி வேலைகளையும் நிறைவுறச் செய்த அம்பிகையின் திருவருளை எண்ணிமெய்சிலிர்த்து நிற்கின்றேன்.

ஏனைய ஆலயங்களை விட மணற்காடு முத்துமாரியம்பாளின் திருப்பணிக்கு அடியார்கள் தாமாகவே முன்வந்து பெரும்நிதியினை வழங்கியுள்ளனர். பரோபகாரி சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் பெரும் பங்களிப்பும் ஏனைய அடியார்களின் பணஉதவியும் இவ்வாலயம் இவ்வளவு சிறப்பாக அமைவதற்கு அம்பிகையின் திருவருளும் கைகூடியமை இவ்வூர் மக்கள் அம்பிகையின்மீது அளவு கடந்த பற்றும் இந்துமத ஆன்மீக விழுமியங்களைப் பேணும் பண்பும் நிறைந்தவர்கள் என்பதை வெளிக்காட்டி நிற்கிறது. இவ்வாலய திருப்பணிச் சபையின் செயலாளராக இருந்து திருப்பணி வேலைகளைச் செய்விப்பதற்கு அம்பாளின் திருவருள் கிடைத்தமை எனது வாழ்வில் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். அம்பாளின் ஆலயம் இவ்வளவு சிறப்பாக அமைந்தமை எனக்குப்பூரண மனத்திருப்தியைத் தருகிறது. இவ்வாலய ஸ்தாபகர்கள் பரம்பரை பரம்பரையாக பூஜை வழிபாடுகளைச் செய்துவரும் பிரம்மஸ்ரீ நா. ஞானசம்பந்தக்குருக்கள் ஐயா, ஏனைய கும்பாபிஷேக குருமார் திருப்பணி செவ்வனே நிறைவுற பணஉதவி, பொருள் உதவி வழங்கிய அடியார்கள் அனைவரையும் நன்றியோடு நினைவுகூர்ந்துஅனைவருக்கும் அம்பிகையின்திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**கணேசபிள்ளை பாலச்சந்திரன் (ஜே.பி) செயலாளர், திருப்பணிச்சபை**

**மலரமைப்பு: காரைநகர் செய்தியாளர் (வலம்புரி)**


ற்புதா ரேடிங் கொம்பனி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.

சுப்ப சூஸ் நிறுவனம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஞ்சியம், ரநகர்.

காயத்திரி காட்வெயர், ஆலடி, காரைநகர்.

Quency Distributors
National Paper Compani Limited
Solr Agent For MPCL Product.
271, K.K.S.Road, Jaffna.

சீமாட்டி
புடைவைக்கடல்
பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கேள்விக்குறியாகும் மகிந்தவின் எதிர்காலம்!

அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்ல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்ததை அடுத்து, அவரது எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி இப்போது முக்கிய விவகாரமாக மாறியுள்ளது. கடந்த 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்பாராத தோல்வியை கண்டிருந்தார். இந்தத் தோல்வியை அவர் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இன்னும் குறைந்தது ஏழு ஆண்டுகளுக்கு 2022 ஆம் ஆண்டு வரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியிலிருப்பதே அவரது திட்டமாக இருந்தது. அந்தத் திட்டம் நிறைவேறும் என்ற முழு நம்பிக்கையில் அவர் இருந்திருந்தார். இதனால், அவர் தனது அடுத்தடுத்த அரசியல் நகர்வுகள் குறித்த திட்டங்கள் எதையும் முன்கூட்டியே வகுத்துக் கொள்ளக்கூடிய நிலையேதும் இருந்திருக்கவில்லை. இப்போதைக்கு தாம் ஆட்சியிலிருப்பதுவும் தனக்கு பின்னர், அதிகாரத்தை தனது மகன் நாமல் ராஜபக்ஷவின் கையில் கொடுப்பதுமே அவரது மேலோட்டமான எதிர்காலத்திட்டமாக இருந்தது.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்ற திடீர் சூறாவளி தனதும் தனது குடும்பத்தினதும் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கும் என்று அவர் கொஞ்சமேனும் எதிர்பார்த்திருக்கவில்லை. இதனால், அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட ராஜபக்ஷ, அடுத்தகட்டம் குறித்து தீர்மானிக்க முடியாத நெருக்கடியினுள் சிக்கிப்போயுள்ளார்.

மக்களால் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, இனி அரசியலில் ஈடுபடுவதிலிருந்து ஒதுங்கிக் கொள்வோம் என்று அவரால் இன்னமும கூட முடிவெடுக்க முடியவில்லை. மிக உயர் பதவியிலிருந்த ஒருவர், மக்களால் நிராகரிக்கப்படும்போது, மீண்டும் மக்களின் முன் வாக்குக் கேட்டுச் செல்லாமல், அரசியலை விட்டு ஒதுங்குவது மாண்பு.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் பதவியிலிருந்து விலகிய பின்னர், அரசியலில் ஈடுபடவில்லை. இவர்கள் மூன்றாவது பதவிக்காலத்துக்கு போட்டியிட வாய்ப்பின்றியோ அல்லது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விரும்பாமலோ அரசியலிலிருந்து ஒதுங்கிவிட்டனர்.

ஆனால், மஹிந்த ராஜபகஷ அவ்வாறான ஒருவரல்ல. அவர் பதவியிலிருந்த போதே, மூன்றாவது பதவிக்காலத் துக்காக போட்டியிட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டவர். அவ்வாறு மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு தலைவராக இருந்தபோதிலும், தனது 45 வருட அரசியல் வாழ்வு குறித்து பெருமையாக பேசும அவரால், தனது கடந்த கால அரசியல் வாழ்வுக்கு மாண்பை ஏற்படுத்தும் முடிவொன்றை இன்ன மும் எடுக்கமுடியவில்லை. அவ்வாறு செய்ய முடியாதமைக்கு காரணம், அவரது அரசியல் எதிர்பார்ப்பு இன்னமும் ஈடேறவிலலை என்பதேயாகும.

இன்னமும் அதி காரத்தை பிடிக்கவேண்டுமென்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருக்கிறது. இல்லாவிட்டால், அவர் மூன்றாவது பதவிக்காலத்துக்காக போட்டியிட்டி ருக்கமாட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில், இப்போது தனக்காக மட்டுமன்றி தன்னை சுற்றியிருப்ப வர்களுக்காகவேனும் அதிகாரத்துக்காக போட்டியிடவேண்டிய நிலையில் இருக்கிறார். அவரது குடும்பத்தினர் மட்டுமன்றி, அவருக்கு ஆதரவளித்து உயர்த்திவிட்டவர்களும் அவரது ஆட்சியில் அவரை சுற்றி இருந்தவர் களும் இப்போதும் அவரை வைத்து தம்மால் மேலெழ முடியுமென்று நம்புபவர்களும் அவரை அரசியலிலிருந்து ஒதுக்கிவிடப் போவதில்லை. இதுவே, மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் எதிர்காலம் குறித்து முடிவெடு க்க முடியாதுள்ளமைக்கு முக்கிய காரணம்.

இப்போது அவரது கையிலிருந்து ஆட்சி அதிகாரம் மட்டும் பறிக்கப்படவில்லை. கட்சியின் மீது அவர் செலுத்திய அதிகாரமும் பறிக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து கட்சியின் அத்தனை அதிகாரங்களையும் எவ்வாறு பறித்தெடுத்தாரோ, அதுபோலவே இப்போதும் அவருக்கும் நடந்திருக்கிறது. ஆனால, கொஞ்சம் வித்தியாசமாக அவராகவே இறங்கி வந்து தன்னிடமிருந்த கட்சியின் தலைமைப் பதவியை விட்டுக்கொடுத்திருக்கிறார். அந்த இடத்தில் மஹிந்த ராஜபக்ஷ விட்டுக்கொடுக்க மறுத்திருந்தால், நெடுநாளைக்கு அவரால் அந்தப் பதவியை கட்டிக்காக்க முடிந்திருக்காது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலிருந்து விலகிக்கொண்ட மஹிந்த ராஜபகஷவை, மீண்டும் அரசியலுக்குக் கொண்டு வருவதற்கும் பிரதமர் வேட்பாளராக போட்டியிடவைப்பதற்கும் முயற்சிகள் நடப்பதாக தெரிகிறது. ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்தவுடனேயே, மஹிந்த ராஜபக்ஷ அரசியலிலிருந்து விலகமாட்டார், அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடுவார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அறிவித்திருந்தார்.

விமல் வீரவன்ச மட்டுமன்றி, முன்னாள் அமைச்சர்களான தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ.குணசேகர போன்ற இடதுசாரித் தலைவர்களும்கூட மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். இவர்கள் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ளவோ, அவரது தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கவோ தயாராக இல்லை.

இந்தளவுக்கும், இவர்கள் அனைவரும் முன்னர் சந்திரிகா குமாரதுங்கவின் அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்தவர்கள். சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்றாலும், இப்போது சந்திரிகா பின்புலத்திலிருந்து இயக்க முற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இவர்களால் கைகோர்க்க முடியவில்லை. இதற்கு கொள்கை ரீதியான முரண்பாடே காரணமென்று கூறினால் அது அபத்தமானது.

அதைவிட, கொள்கை ரீதியில் அப்படியொன்றும் வித்தியாசமான தலைவராக ராஜபக்ஷ இருந்துவிடவும் இல்லை. கடந்த பத்தாண்டுகளாக முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவை சுற்றி இயங்கிப் பழகிவிட்ட இந்த அரசியல் தலைமைகளால், அதனைக் கைவிட்டு வெளியே வரமுடியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசியல் கவர்ச்சியும் மக்கள் ஆதரவும் அவர்களின் வெற்றிக்கும் தேவைப்படுகிறது. அண்மைய ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிட்டத்தட்ட 57 இலட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன. இந்தளவுக்கு மக்கள் ஆதரவு உள்ள ஒருவரை முன்னிறுத்தி, அரசியல் செய்வதே புத்திசாலித்தனமானது என்று அவரது முன்னைய கூட்டணிக் கட்சிகள் நினைக்கின்றன. ஏனென்றால், எப்படியும் இன்னும் இரண்டொரு மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிடும்.

அடுத்து நடக்கப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய நிலையில் விமல் வீரவன்சவோ, தினேஸ் குணவர்த்தனவோ, திஸ்ஸ விதாரணவோ, டியூ.குணசேகரவோ, வாசுதேவ நாணயக்காரவோ இல்லையென்று கூறமுடியும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டது இந்தக் கட்சிகளுக்கு பலம் சேர்த்ததே தவிர, இந்தக் கட்சிகளால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலம் பெற்றதென்று கூறுவது மிகையான கருத்தாகும்.

முன்னதாக மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார் என்று தகவல்கள் வெளியாகின. ஆனால, அவரிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் பதவி போய்விட்டது. இப்போது அவரிடம் உள்ளது கட்சியின் போசகர் பதவி மட்டும்.

தேர்தலுக்கு பின்னர் இராணுவத்தினரின் துணையுடன் ஆட்சியை தக்கவைக்க முயன்றதாக சதிக் குற்றச்சாட்டு சுமத்தப்படும் நிலையில், அதனை வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போசகர் பதவியிலிருந்தும் மஹிந்த ராஜபக்ஷவை நீக்கும் முயற்சிகள் நடப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இந்த நிலையில், மீண்டும் அவரால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக அரசியலுக்கு வருவதோ, பிரதமர் பதவியை பிடிப்பதோ சாத்தியமானதொரு விடயமாக இருக்காது.

எனவே, அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஒரு புதிய கட்சியை உருவாக்கி, அதனுடன் கூட்டணியை வைத்துக்கொண்டு போட்டியிட்டால், தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியுமென்று அவரது முன்னைய கூட்டாளிகள் எதிர்பார்க்கிறார்கள். இதனாலேயே, மீண்டும் அவரை எப்படியாவது அரசியலுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் அவர் கள் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், தாம் புதிய கட்சியையோ, கூட்டணியையோ உருவாக்கப்போவ தில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ கூறியதாக செய்திகள் வெளியாகின. ஆனால், அது எந்தளவுக்கு உறுதியான கருத்தென்று கூறமுடியாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அளிக்கப்பட்டுள்ள கட்டாய ஓய்வு, அவரை மட்டுமே அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்திவிடப் போவதில்லை. அவரை சுற்றியிருந்த குடும்பத்தினரையும் அரசியல் கட்சிகளையும்கூட அகற்றிவிடும் ஆபத்துள்ளது.

தேர்தல் தோல்வியின் பின்னர், புதிய அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள், ராஜபக்ஷவுக்கு பெரும் சவாலான விடயமாகியுள்ளது. தொடர்ச்சியாக எல்லா முனைகளிலிருநதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அவரை திணறடிக்கத் தொடங்கியுள்ளன. அவர்மீதும, அவரது சகோதரர்கள் மற்றும் பிள்ளைகள் மீதும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டபோது, அமைதியாகவே இருந்தார்.

ஆனால், தனது மனைவி சிராந்தி ராஜபக்ஷ மீது 100 கிலோ தங்க மோசடி முயற்சி குறறச்சாட்டை முன்னாள் பொலிஸ் அதிகாரி வாஸ் குணவர்த்தனவின் மனைவி சுமத்தியதையடுத்தே, அவர் வாயை திறந்தார. தன் மீதும் தனது குடும்பத்தின் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாகவும் அவை அனைத்தும் பொய்யானவை என்றும், என்றோ ஒரு நாள் இது வெளிச்சத்துக்கு வருமென்றும் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையின் ஓர் இடத்தில், தாம் ஓய்வுபெற்ற பின்னரும் அமைதியாகவோ நிம்மதியாகவோ இருக்கமுடியவில்லை என்றும் கூறியிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. இது அவர் விரக்தியின் உச்சத்தை எட்டியிருக்கிறார் என்பதை உணர்த்துகிறது.

கடந்த 9 ஆம் திகதி அதிகாலை அலரி மாளிகையி லிருந்து வெளியேறியபோது, தனதும் தனது குடும்பத்தினதும் பாதுகாப்புக்கு தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தரவாதத்தை பெற்றிருந் தார் மஹிந்த ராஜபக்ஷ. ஆனாலும், அவரை குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாப்பதாக எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள், முறைகேடுகள் எல்லாவற்றுக்குமே அவர் பதில் கூறி ஆகவேண்டிய நிலை ஏற்படும் போலத் தெரிகிறது. தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்து அவரை நிலைகுலைய வைக்க புதிய அரசாங்கம் முயற்சிப்பதாக தெரிகிறது. இத்தகைய நிலையில், தம்மையோ தமது குடும்பத்தினரையோ புதிய அரசாங்கம் விட்டுவைக்காது என்பது அவருக்கு புரிந்திருக்கும்.

குற்றச்சாட்டுகளிலிருந்து புதிய அரசாங்கம் தம்மை பாதுகாக்காது என்று தெரிந்த நிலையில், தனது குடும்பத்தினது நலனை பாதுகாப்பதற்காக அவர் மீண்டும் அரசியலுக்கு வர முயற்சிக்கலாம். அதற்காக அவர் வேறுபட்ட வழிமுறைகளை கையாள முயன்றாலும்கூட ஆச்சரியமில்லை. என்றாலும், மீண்டும் அரசியலில் உச்சத்தை எட்டிப் பிடிப்பது என்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு இனிமேல் அவ்வளவு சுலபமான காரியமாக இருக்காது. இது அவரது குடும்பத்தினருக்கும் அவரை சுற்றி இருப்போருக்கு முள்ள பாதகமான விடயம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்த மிகப்பெரிய தவறு உள்நாட்டுக்குள் மட்டுமன்றி, சர்வதேச அரங்கிலும் நண்பர்களை விட விரோதிகளை அதிகம் சம்பாதித்துக் கொண்டமை. அதன் விளைவாக, இன்று மஹிந்த ராஜபக்ஷவின் நிலைக்காக எந்த நாடுமே வாய் திறந்து வருத்தம் தெரிவிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் காய் நகர்த்தல்களில் செய்த பல தவறுகள் இப்போது அவரையே எதிர்த் துத் தாக்க ஆரம்பித்துள்ளன. இது அவரை எங்கு கொண்டுபோய் நிறுத்தப் போகிறது என்பதை காலந்தான் தீர்மானிக்கவேண்டும்.

**-கே.சஞ்சயன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிபுகள் வெளியாகும்போது அலரிமாளிகையில் இருக்கக் கூடாது

## தேர்தல்கள் ஆணையாளர் விளக்கம்

(கொழும்பு)



**ஜனாதிபதித்தேர்தல் முடிபுகள் வெளியிடப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணையாளராகிய நானோ அல்லது பிரதம நீதியரசரோ அலரிமாளிகையில் இருக்கக் கூடாது என தேர்த்ல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

தேர்தல் முடிபுகள் வெளியாகிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியிருந்த அலரி மாளிகைக்கு தேர்தல்கள் ஆணையாளரும் பிரதம நீதியரசரும் செல்லக் கூடாது.

தேர்தல் முடிபுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் போது, அரசாங்க அதிகாரிகளான தாமும் பிரதம நீதியரசரும் தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரின் வீட்டில் இருப்பது, தொழில் ஒழுக்க விதிகளுக்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினமன்று இரவு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அலரிமாளிகையில் தங்கியிருந்தமை குறித்து, சிங்கள ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே தேர்தல்கள் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார.

இருப்பினும் முன்னாள் பிரதம நீதியரசரான மொஹான் பீரிஸ், தேர்தல் முடிபுகளை வெளியிடும் தினத்தன்று தான் அலரிமாளிகையில் இருக்கவில்லை என்று தன் மீதான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து மறுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கொழும்பு பல்கலைக்கழக வீட்டை திஸாநாயக்க கையகப்படுத்தினார்

இலங்கையின் முன்னாள் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, கொழும்பு 7இல் உள்ள வீடு ஒன்றை போலி ஆவணங்களை சமர்ப்பித்து கையகப்படுத்தியதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வீடு, ஏற்கனவே கொழு மபு பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது.

இதன கடைசி உரிமையாளராக கலாநிதி சிவா சின்னத்தம்பி என்பவர் இருந்துள்ளார். இவரே, குறித்த வீட்டை கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

2000 ஆம் ஆண்டு சிவா சின்னத்தம்பியின் மறைவை அடுத்தே முன்னாள் உயர்கல்வி அமைச்சர் குறித்த வீட்டை போலி ஆவணங்களை சமர்ப்பித்து கையகப்படுத்திக் கொண்டதாக தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் இது தொடர்பான வழக்கை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதவான் கிஹான் பிலபிட்டிய. குறித்த வீட்டின் தற்போதைய உரிமையை கண்டறியுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக்குற்றச்சாட்டு தொடர்பில் எஸ்.பி.திஸாநாயக்க கருத்தெதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 2 யானைக்குட்டிகளையும் கோத்தபாய ஒப்படைத்தார்

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடம் சட்டரீதியாக இருந்ததாக கூறப்படும் யானைக்குட்டிகள் இரண்டையும் அவர் ஒப்படைத்துள்ளதாக சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

இந்த இரண்டு யானைக்குட்டிகளும் பின்னவல சரணாலயத்துக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இதிலொரு யானைக்குட்டி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பெற்று, கோத்தபாய ராஜபக்ஷவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு யானைக்குட்டிகளையும் தம்மால் பராமரிக்க முடியாது என்று பாதுகாப்பு அமைச்சின்முன்னாள் செயலாளர் தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் வசந்த சேனாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரதம நீதியரசரின் பதவி நீக்கம் குறித்து விவாதம் நடத்த சந்தர்ப்பம் வழங்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

பிரதம நீதியரசர் நீக்கம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த இடமளிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார.

புதிய பிர்தம நீதியரசர் நியமனம், முன்னாள் பிரதம நீதியரசர் பணி நீக்கம் என்பன தொடர்பில் எதிரக்கட்சிகள் கோரிய விவாதத்திறகு இடமளிக்க இணங்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும். இதற்காக விசேட பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்படும்.

பாரபட்சமின்றி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவர். குற்றம் இழைத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களா? அல்லது சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களா? என கவனிக்கப்படமாட்டாது. குற்றச் செயல்கள் தொடர்பிலேயே கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நேரடி நேர்காணல் ஒன்றில் நேற்று முன் தினம் பங்கேற்ற போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# அரசியல் பழிவாங்கலுக்குரிய கருவியாக ஊடகம் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படும்

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு



அரசியல் பழிவாங்கல்களுக் குரிய சாதனமாக ஊடகம் பயன்படுத்தப்படுவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்துடன் நிறுத்தப்படுமென தகவல் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் தேர்தல் முடிவடையும் வரை ஜனாதிபதிக்கு சேறுபூசும் வகையில் பிரசுரிக்கப்பட்ட செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்பில் நாம் கூடுதல் அவதானம் செலுத்தவுள்ளோம்.

அந்தவகையில் ஜனாதிபதிக்கு சேறுபூசும் வகையிலான செய்திகளும் விளம்பரங்களும் யாரால் எழுதப்பட்டது. அதற்கான பணிபுரையை விடுத்தவர்கள் யார்? அதன் பின்புலம் என்னவென்பது தொடர்பிலான அனைத்து தகவல்களும் அடங்கிய விரிவான அறிக்கை எதிர் வரும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சராக பதவியேற்றுக் கொண்டதையடுத்து லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் கயந்த கருணாதிலக்க சேவையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடக சுதந்திரத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே எமது இலக்கு. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் பேனா பிடித்து உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்கக்கூடிய நிலை இப்போது எமது நாட்டில் உருவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சட்டமும் சட்டையும்

எனக்கு ஒரு நண்பர். அவர் ஒரு வழக்கறிஞர். ஒருநாள் அவரிடம் கதைத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது கேட்டேன்... "ஏன் சேர்! நீங்கள் நீதிமன்றில் வாதாடும்போது கறுப்புநிற அங்கி அணிந்து கொள்கிறீர்களே... அதற்கு என்ன காரணம்? சட்டத்திற்கும் கறுப்பு நிறத்திற்கும் என்ன தொடர்பு?" என்றேன்.

"அது ஒரு சுவாரஸ்யமான கதை" என்றேன்.

"சொல்லுங்கள் கேட்போம்" என்று சொன்னேன்.

கி.பி 1694 ஆம் ஆண்டிலே இங்கிலாந்து அரசி இரண்டாவது மேரி இறந்து போனார். அந்த ராணியின் கணவன் மூன்றாம் வில்லியம். அவர் ஒரு உத்தரவிட்டார்.

அரசியினுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையிலே வழக்கறிஞர் அனைவரும் கறுப்புநிற அங்கி அணிய வேண்டும் என்றார்.

அன்று ஆரம்பித்த அந்தப் பழக்கம் இன்று வரை மாறவே இல்லை.

வழக்கறிஞர்கள் முதலிலே கறுப்பு அங்கி மட்டும் தான் அணிந்தார்கள். அதிலே ஒரு சிறிய சங்கடம்.

ஏற்கனவே உடம்பு கறுப்பாக இருப்பவர்கள் அதற்கு மேலே கறுப்பு நிற உடை வேறாக அணிந்து கொண்டால், முகம் 'பளிச்' என்று தெரியாது தானே.

அதனால் முகம் பளிச்சென்று தெரிவதற்காக அவர்கள் வெள்ளை நிற பட்டியை அணிய ஆரம்பித்தார்கள்.

இப்படியாக இங்கிலாந்திலே அந்தப் பழக்கம் வழமைக்கு வந்தது.

அந்த சமயத்திலே இந்தியாவை ஆட்சி செய்தனர் பிரிட்டிஷ்காரர்கள்.

அதனாலே அங்கேயும் அந்தப் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

இங்கிலாந்து நீதிமன்றம் மிகவும் மதிப்பு வாய்ந்த இடம். அந்த அளவிற்கு சட்டத்திற்கு அங்கே மதிப்பு.

இந்தக் காலத்தில் குற்றவாளிகள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டாலும் மறுகணம் அதே குற்றத்தை இழைக்கிறார்கள்.

சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு வெளிச்சம் என்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிரபாகரன் மர்மங்களை கருணாநிதி வெளியிட வேண்டும்!"

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மரணம குறித்த சர்ச்சை அரசியலாகி இருக்கும் சூழலில், "இந்தியர்களுக்கும் தமிழர்களுக கும் ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும" என்ற போஸ்டர்கள் நெல்லை மாவட்டத் தில் பரபரப்பைக் கிளப்பியுள்ளன. அந்த போஸ்டரில், நேதாஜி, பிரபாகரன் ஆகியோ ருடைய படங்களுடன் நரேந்திர மோடி, கருணாநிதி ஆகியோரின் படங்களும் இடம்பெற்று இருப்பதால், அது தமிழக அரசி யல் வட்டாரத்தில் சூட்டைக் கிளப்பி யி ருக்கிறது.

"தமிழீழ விடுதலை ஆதரவாளர் முன்னணி தமிழ்நாடு" என்ற அமைப் பின் சார்பில் ஒட்டபப்பட்ட அந்தச் சுவ ரொட்டிகளில், "இந்திய தேசிய தலைவர் நேதாஜியின் 118ஆவது பிறந்தநாளி லும் அவர் குறித்து நீடிக்கும் மர்மங் களை நரேந்திரமோடி அரசு உடனடியாக வெளியிட வேண்டும். தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் பற்றிய உண்மை களை தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட வேண்டும்" என்ற வாசகங் கள் இடம்பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் முன்னணியின் ஒருங்கிணைப்பாள ரான வியனரசுவிடம் பேசினோம். "2005 இல் இலங்கை அதிபர் தேர்த லில் ராஜபக்ஷ வெற்றி பெற்றவுடன் விடுதலைப் புலிகளை அழித்து அவர் களின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளைக் கைப்பற்ற நினைத்தார். ஆனால, அப் போது தமிழகத்தில் அ.தி.மு.க ஆட்சி நடந்ததால் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. 2006 இல் தி.மு.க ஆட்சி க்கு வந்த பிறகு ராஜபக்ஷவுக்கு ஆதர வான சூழல் தமிழகத்தில் ஏற்பட்டது. கருணாநிதிக்கு விடுதலைப்புலிகள் மீது இருந்த வெறுப்புணர்வையும் அப் போது தி.மு.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களின் பலகீனங்களையும் புரிந்துகொண்ட காரணத்தினாலேயே ராஜபக்ஷவால் உள்நாட்டுப் போரை தொடங்க முடிந்தது.

2008 மார்ச் 10 ஆம் தகதி வேலூர் சிறையில் இருந்த நளினியை ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா வந்து சந்தி கக வேண்டிய அவசியம் என்ன? அவர்




சர்ச்சைக்குரிய போஸ்டர்...

கள் என்ன பேசிக்கொண்டார்கள் என் பது அப்போது முதல்வராக இருந்த கருணாநிதிக்கு நிச்சயம் தெரியும். அந்த விவரங்களை கருணாநிதி வெளியிட வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு ஆதர வாக தமிழகத்தில் போராட்டங்கள் தீவிர மடைந்த சமயத்தில் அப்போதைய மத்திய அமைச்சரான பிரணாப் முகர்ஜி சென்னைக்கு வந்து கருணாநிதியைச் சந்தித்தார். அதன் பிறகு எம்.கே.நாரா யணன், சிவசங்கர மேனன் ஆகியோர் இலங்கை சென்று வந்தனர். அந்த சமய ததில், "இன்னும் சில நாட்கள் பொறுத் திருப்போம்" என அறிக்கை வெளியிட்ட கருணாநிதி, திடீரென உடல்நிலை சரி யில்லை என மருத்துவமனையில் படுத் துக்கொண்டதன் பின்னணி என்ன?

முத்துக்குமார் தீக்குளிப்பு சம்பவத்துக குப் பிறகு ஏற்பட்ட கொந்தளிப்பை அடக்க முயற்சி செய்ததில் தி.மு.க அரசுக்குப் பெரும் பங்கு இருந்தது. 2009 ஏப்ரல் 10 ஆம் தகதி இலங்கைத் தமிழர்களு க்கு ஆதரவாக சென்னையில் நடந்த பேரணியில் பேசிய கருணாநிதி, "பிர பாகரன் பிடிபட்டால் பஞ்சாப் சீலம் ஆற் றங்கரையில் போரோஸ் மன்னன் அலெக்ஸாண்டரிடம் பிடிபட்டபோது எப்படி நடத்தப்பட்டானோ அதுபோல் நடதத வேண்டும்" என்றும், "நாங்கள் இந்தி யாவில் அடிமைகளாக இருக்கிறோம். ஈழத் தமிழர்களுக்கு உதவ முடியாது" என்றும் பேசியதன் அர்த்தம் என்ன?

ஈழத்தில் கடைசிக்கட்ட போரின்போது நடந்த சம்பவங்கள் அனைத்தும் கருணாநிதிக்குத் தெரியும். பிரபாகரன் பற்றிய உண்மைகள் அவருக்கு நிச்சய மாகத் தெரிந்திருக்க வேண்டும். இலங் கையில் நடந்த அனைத்து விவரங்களை யும் தமிழின மக்களின் நலன் கருதி கருணாநிதி வெளியிட வேண்டும். குறிப் பாக, பிரபாகரன் பற்றிய உண்மைகளை அவர் வெளியே சொல்ல வேண்டும" என் றார் ஆதங்கத்துடன்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் முன்னணியின் நெல்லை மாவட்ட பொறுப்பாளரான கண்மணி மாவீரன, "நேதாஜி பற்றிய உண்மைகளை வெளி யிடாமல் காங்கிரஸ் அரசு மறைத்து வந் தது. இப்போது பி.ஜே.பி ஆட்சிக்கு வந் துள்ள நிலையில், இதுவரை மறைக் கப்பட்டு வந்த அந்த வரலாற்று உண்மை களை மோடி அம்பலப்படுத்துவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இவரும் அதை வெளியிட மறுக்கிறார். நேதாஜியை பொறுத்தவரை, "அடுத்த பிறவி எனக்கு இருக்குமானால், தமிழனாகப் பிறந்து தமிழின மக்களுக்கு தொண்டு செய்வேன்' எனறு சொன்னவர். நேதாஜி, பிரபாகரன் ஆகிய இருவரைப் பற்றிய முழு விவரங் களும் உடனடியாக வெளியிடப்பட வேண் டும். இதை வலியுறுத்தி ஏற்கனவே ரயல் மறியல் போராட்டம் நடத்தினோம். எங்களின் இந்தக் கோரிக்கைக்காகத் தொடர்ந்து போராடுவோம" என்றார் ஆக்ரோஷமாக.

என்ன சொல்லப்போகிறார்கள் மோடியும் கருணாநிதியும்!

**-ஜூனியர் விகடன்-**

# ஈர நிலங்களை பாதுகாப்போம்

**உலக ஈர தினம் இன்று கொண் டாடப்படுவதை முன்னிட்டு இக்கட் டுரை பிரசுரமாக்கப்படுகின்றது.**

ஈர நிலங்கள் ஈர நிலங்களாக இருக்கும் போதே பல்வேறு நன்மைகளைத் தருகின் றன. நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பெரிய தொழிற்சாலை நகரைவிட ஒரு ஈரநிலத் தொகுதிமனிதர்களுக்குஅதிகளவுநன்மையை தருவதாக ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள் ளார்கள். ஆனால், நடைமுறையில் நிலைமை கவலைக்குரியதாக இருக்கின்றது. சில தரவு களின்படி 1900 ஆம் ஆண்டு பூமியிலிருந்த ஈரநிலங்களில் இதுவரையில் 64 சதவீதமா னவை அழிந்துவிட்டது எனக் கருதப்படுகி றது. இவற்றில் அனேகமானவற்றுக்கு மனித செயற்பாடுகளே காரணம் ஆகும்.

**ஈர நிலம் என்றால் என்ன?**

உலகில் ஈரநில பாதுகாப்பை முன்னிலைப் படுத்தும் ரம்சார் பிரகடனம் ஈரநிலத்தை பின்வருமாறு வரையறுக்கிறது. ஈரநிலங்க ளானவை இயற்கையான அல்லது செயற் கையான நிரந்தரமான அல்லது தற்காலிக மான நிலையான அல்லது ஓடும் நீராக, நன் னீராக அல்லது தாழ்வற்றுப்பெருக்கு நிகழ் கையில் 6 மீற்றர் ஐ மிஞ்சாத ஆழ்ந்த கடல் நீரை உள்ளடக்கும், உலர் நீராக சதுப்பு நிலம், தாழ் சேற்று நிலங்கள் மற்றும் முற்றா நிலக் கரி கொண்ட நிலங்கள் மற்றும் நீர் கொண்ட பகுதிகள் ஆகியவற்றை கொண்டவை.

இதனை எளிமையாக ஆறுகள், அருவி கள், ஓடைகள், சதுப்பு நிலங்கள் வயல் நிலங்கள் சவர் நீர் கொண்ட கடல் நீரேரிகள் கடல் குடாக்கள் ஆகியன 6 மீற்றருக்கு மேற் படாத நீரைக் கொண்டவையாக இருந்தால் அவை ஈரநிலம் எனப்படும்.

**ஈர நிலங்களின் பயன்கள்**

மக்களுக்குத் தேவையான நீர் கிடைத் தல், நிலத்தடி நீரைப்பேணல், நீரைச் சுத்தி கரித்தல், வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தல் போன்றன இப்போது யாழ்ப்பாணத்தில் பரவ லாகப் பேசப்படும் பிரச்சினைகளுடன் சம்பந் தப்பட்டதாக அமைகின்றது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஆகவே, எமது பிரதேசங் களில் உள்ள ஈரநிலங்கள் அழி க்கப்பட்டால் நிலைமைகள் மோசமடையும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கூறிய நன் மைகளுடன் மனிதனுக்குரிய பிரதான உண வாகிய நெல் ஒரு ஈரநிலத்தாவரம் என்ப தும் கவனிக்கத்தக்கது. பிரதான மான புரத உணவாகிய மீன் வகைகளில் பெரும்பாலானவை சில குறிப்பிட்ட ஈரநிலங்களிலேயே இனம் பெருகுகின்றன. எனவே, அதற்கும் ஈரநிலம் முக்கியமாகும். ஆகவே, ஈரநிலம் மனித உணவுக்கு முக்கியமாகும்.

அவற்றுடன் இயற்கை மருந்துகளுக் குரிய மூலப்பொருட்கள், கட்டடப்பொருட்கள் (சுண்ணாம்பு சோகி போன்றன) சில காலைப் பொருட்களுக்கான உற்பத்தி மூலப்பொருட் கள், மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும் ரம்யமான சூழலை வழங்கல், பொழுது போக்குக்குரிய இட மாக விளங்கல், தொழில்வாய்ப்புகளுக் குரிய இடமாக விளங்கல், கடலரிப்பையும் காற்றரிப்பை யும் தடுத்தல், பல அரிய மற்றும் இதுவரை கண்டறியப்படாத புதிய உயிரினங்களுக் குரிய வாழ்விடம் மற்றும் நுண் வாழிடமாக அமைதல் போன்றன ஈர நிலங்களின் ஏனைய நன்மைகள் ஆகும்.

**ஈரநிலங்கள் அழிவடைவதற்கான காரணங்கள்**

மனித [illegible] ப்பை ஏற்படுத் தக்கூடிய விதத் தில் பூமியில் உள்ள ஈரநிலங் கள் அழிவடைந்து கொண்டு செல்கின்றமை என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்கு பல் வேறு காரணங்களும் தொடர் புடைய செயற்பாடுகளும் கூறப் படுகின்றன.

மனித குடித் தொகை அதிகரிப்பு, ஈர நிலங்களின் பல்வகையான பயன்கள், தேவைகள் ஆகியன பற்றி கவனியாமை, ஈர நிலங்களின் உண்மையான பெறுமா னத்தினை அறியாமை அத்துடன் நின்று



நிலைக்கும் தத்துவத்திற்குட்படாமல் மனிதன் பேராசைக்கு உட்பட்டு செயற்படுகின்றமை ஆகியனவே பிரதானமான 4 காரணங்கள் ஆகும்.

**இலங்கையில் உள்ள ஈர நிலங்கள்**

சர்வதேச மட்டத்தில் ஈர நிலங்களை தரப் படுத்தி அடையாளம் காணும் இரண்டு முக்கிய மான முறைகள் இலங்கைக்கு பொருத்த மானதாகும். முதலாவது 1989 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆசிய ஈரநில விபரக்கொத்து, இந்த கொத்தின் அடிப்படையில் இலங்கை யில் 41 கரையோர ஈர நிலங்கள் அடையாளம் காணப்பட்டன.

அவற்றுள் வடமாகாணத்துக்குரியதாக, ஊர்காவற்றுரை ஈரநிலம், புங்குடுதீவு கடனீ ரேரி, யாழ்ப்பாணத்துக்கு மேற்கில் அமைந் துள்ள ஈர நிலங்கள், உப்பாறு கடனீரேரி, தொண்டைமானாறு கடனீரேரி, சுண்டிக்குளம் கடனீரேரி, யாழ்ப்பாணக் கடனீரேரி, பெரிய கரச்சி, சின்னக் கரச்சி கடனீரேரிகள், மன்னார் கடனீரேரி, பாலம் சார்ந்த நிலங்கள், ஆதா மின் பாலம், போக் வளை குடா, பேய்த்துரை, விடத்தல் தீவு மற்றும் இரணைதீவு ஆகியன விளங்குகின்றன. ஆனால், சர்வதேச மட்ட பாகுபடுத்தலின் படியுள்ள ரம்சார் பிரகடனத் தின்படி இவற்றுள் ஒன்றுகூட ரம்சார் ஈர நில மாக பிரகடனப்படுத்தப்படவில்லை. இலங்கை யில் 3 ஈர நிலங்களே ரம்சார் ஈர நிலங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவையா வன பூந்தல தேசியவனம், ஆனை விழுந் தான் குளத் தொகுதி மற்றும் மாதுகங்கை ஆகியன. எமது பிரதேச ஈரநிலங்கள் (உதா ரணம் தொண்டைமானாறு கடல் நீரேரி ரம் சார் ஈரநிலமாக பிரகடனப்பட வேண்டுமா யின் மிக அதிகளவு ஆழமான ஆய்வுகள் செய்யப்பட்டு அவை ரம்சார் ஈர நிலமாக்கப் படுவதற்குரிய தகுதி உடையவை என்று நிறு வப்படவேண்டும்.

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

பாடசாலைகள், அரச மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவன ங்கள் ஏனைய சுற்றுப்புறச் சூழல் பிரச்சி னைகளைப்போல் ஈர நிலங்கள் அழிவடை தல் குறிப்பாக எமது பிரதேச ஈர நிலங்களு டன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு சமூக் மட்டச் செயற்பாடுகளை மேற் கொள்ள வேண்டும்.

எமது பிரதேச ஈர நிலங்களில் முக்கிய மானவை எமது கடல் நீரேரிகள். அவற்றில் குப்பைகளை (உக்கிப் பிரிகையடையாத குப்பைகளை) கொட்டுதல், ஒழுங்காக, கட்ட மைக்கப்படாத மீன்பிடிமுறைகள், கிருமி நாசினி, களைநாசினிகளின் அதீத பாவனை போன்றனவற்றை கட்டுப்படுத்த நடவடி க்கை எடுக்க வேண்டும்.

**கணபதிப்பிள்ளை அசோகன்**
ஆய்வுக்குழு அங்கத்தவர்
தொண்டைமானாறு
வெளிக்கள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் நாளை கவனயீர்ப்பு

## நாங்கள் இயக்கத்தினர் ஏற்பாடு

(குருமன்காடு)

வடக்கு கிழக்கில் செயற்பாட்டு வலைய மைப்பைக் கொண்டுள்ள நாங்கள் இயக்கத் தினர் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின ருடன் இணைந்து மாபெரும் கவனயீர்ப்பு நிகழ்வினைநாளைசெவ்வாய்க்கிழமைவவுனியா நகரசபை மைதானத்தில் நடத்தவுள்ளனர்.

மக்களின் நெஞ்சை அழுத்தும் குரல்வ ளையை நெரிக்கும் சமகாலப் பிரச்சினைக ளுக்கு பதிலளிக்குமாறும் தீர்வளிக்குமாறும் கோரியும் அரசியல்கைதிகளுக்கு விடுதலை கோரியும் காணாமற்போகச் செய்யப்பட்ட வர்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசை வலியுறுத்தியும் வவுனியாவில் கவன யீர்ப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. அத்துடன் மனித உரிமைப் பிரகடனங் களை வழித் தொடரும் மனித மாண்புகளுக்கு கௌர? பந்தில் தன்னை அடையாளப்படுத்த விரும்பு கிறது எனில்,

குறித்த கவனயீர்ப்பு நிகழ்ச்சியில் நாடு முழுவதுமுள்ள சிவில் சமூக, மனிதவுரிமைகள், அரசியல் செயற்பட்டாளர்கள், மதப்பிரமுகர் கள், அருள்தந்தைகள், அருட்சகோதரிகள் அர சியல் கைதிகளின் பெற்றோர்கள் ,உறவி னர்கள், காணாமற்போகச் செய்யப்பட்டவ ர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், கல்வி யாளர்கள், ஊடகவியலாளர்கள், ஊடக நண் பர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள், மாண வர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் எத்தகைய காலதாமதங்களும் இன்றி இரத்துச் செய்யப் படல் வேண்டும்.

அரசியல் கைதிகள் எனும் சொற்பிர யோ கமே இலங்கையில் பழக்கத்தில் இல்லாதா வாறு அனைத்து கைதிகளும் மறுபேச் சின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்.

இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருந்தோர், படுகொலை செய்யப் பட்டோர், அவர்களில் எஞ்சிப்பிழைத்திருப் போர் பெயர் விபரங்கள் இதயசுத்தியுடன் நாட்டின் குடிமக்களுக்கு பகிரங்கப்படுத் தப் படல் வேண்டும். குறித்த இரகசிய முகாம்கள் இலங்கை யின் எந்தெந்த பகுதிகளில் செயற் பட்டன. அவற்றை நிர்வகித்துக்கொண்டிருந் தவர் கள் யார் என்பன பற்றியெல்லாம் நாட் டின் குடி மக்களுக்கு வெளிப்படுத்தப்படல் வேண் டும்.

கட்டாயப்படுத்தப்பட்டு கடத்தப்பட்டு காணா மற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் பொறு ப்புக்கூறப்படல் வேண்டும். மனிதத்துவத்து க்கு எதிரான வன்முறைகள் குற்றங் களினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களு க்கு நீதி மற்றும் இழப்பீடுகள் வழங்கப்படல் வேண்டும் என அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.(அ-2-250)




## பாடசாலை தோட்டம் அமைக்க விரும்பும் பாடசாலைகளின் விபரம் கோரப்படுகின்றது

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் தின் கீழுள்ள கல்வி வலயங்களிலுள்ள பாட சாலைகளில் பாடசாலை உணவுச் செயற் றிட்டம் ஊடாக தோட்டம் அமைப்பதற்கு ஆர் வமுள்ள பாடசாலைகள் தமது விபரத்தை எதிர் வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் பாக பாடசாலை உணவு செயற்றிட்டம் இணைப் பாளர், வடக்கு மாகாண கல்வித் திணைக் களம், மருதனார்மடம், சுன்னாகம், யாழ்ப்பா ணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு வடமாகாண கல்வித் திணைக் களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவி ருத்தி) கு.பிரேமகாந்தன் வலயக் கல்வித் திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

பாடசாலை உணவு செயற்றிட்டம் நடை முறைப்படுத்தப்படும் பாடசாலைகளில் பாட சாலை தோட்டம் அமைப்பதற்கு நீர் வசதி, இடவசதி, பாதுகாப்பு வேலி என்பவற்றைக் கொண்டுள்ள ஆர்வமுள்ள 10 பாடசாலை களை வலய ரீதியாக தெரிவு செய்து உடன் அனுப்பி வைக்குமாறு அவர் அந்தந்த வல யக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். (அ-2-15)

## அடிப்படை வசதிகளின்றி மருதங்குளம் கிராமம்



(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் உள்ள மருதங்குளம் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மருதங்குளம் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் பூரணப்படுத்தப்படாத நிலையில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

கிராமத்தின் வளர்ச்சியும் அக் கிராம மக் களின் வாழ்வியலும் அவர்களின் அடிப்படை வசதிகளிலேயே தங்கியிருக்கின்றது என்பதே உண்மை. எனினும் இவ்வாறான அடிப் படை வசதிகள் இன்றி தினமும் அல்லலுறும் மக்களை தாங்கிய கிராமங்கள் இன்றும் எம் கண்முன்னே இருக்கவே செய்கின்றது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து 14 வருடங்களின் பின்னர் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேறிய 59 குடும்பங்கள் இக் கிரா மத்தில் வாழ்ந்து வருகின்றன.

எனினும் இக் கிராம மக்கள் ஐந்து வருடமாகியும் மலசலகூடங்களோ, வீட்டு வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ இன்றி தமது வாழ்வியலை நடத்தி வருகின்றனர்.

தமக்கு வீட்டுத்திட்டத்தை தாருங்கள் என அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதிலும் எவ்வித பலனும் கிடைக்காத நிலை யில் வாழும் இம்மக்கள் ஏமாற்றமே மிஞ் சியவர்களாக மீண்டும் கிராமத்தில் தமது வாழ்வை கொண்டு செல்கின்றனர். (அ-2-250)

## யாழ். கிளிக்கு பேருந்து சேவை

யாழில் இருந்து கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆகிய இடங்களுக்கு பயணிக்கும் அரச ஊழி யர்கள் மற்றும் மாணவர்களின் நலன்கருதி கிளிநொச்சி மாவட்ட இ.போ.ச. பேருந்து சபையினரால் இன்று திங்கட்கிழமை பேரு ந்து சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சேவையானது யாழ்ப்பாணம் பேரு ந்து நிலையத்திலுள்ள கொடிகாமம் பேருந்து புறப்படுகின்ற இடத்திலிருந்து காலை 6.10 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி டிப்போ சந் தியை அடைந்து இரத்தினபுரம் வீதி வழியாக கல் மடுவினை காலை 8 மணிக்கு சென்றடைய வுள்ளது.

கல்மடுவிலிருந்து காலை 9 மணிக்கு புறப்படும் குறித்த பேருந்து இரத்தினபுரம் வீதி யூடாக டிப்போ சந்தியை அடைந்து முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

அதேவேளை கிளிநொச்சி பேருந்து நிலை யத்தில் இருந்து பிற்பகல் 1.30 மணிக்கு இரத் தினபுரம் வீதியூடாக பயணிக்கும் பேருந்து கல்ம டுவை பிற்பகல் 2 மணிக்கு சென்றடையும்.

அதன்பின்னர் குறித்த பேருந்து கல்மடு வில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்பட்டு இரத்தினபுரம் வீதி வழியாக டிப்போ சந்தியை அடைந்து பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பா ணம் பேருந்து நிலையத்தை வந்தடையும்.

அத்துடன் அரச அலுவலர்களுக்கு 35 சத வீத கழிவுகளுடன் பருவகால சீட்டுகளும் வழங்கப்படும்.

இச் சேவையால் அரச ஊழியர்கள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் என ப்பல ரும் நன்மை அடைய வுள்ளதாக கிளிநொச்சி பேருந்து சாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள் ளனர். (அ-2-254)

# நீவில்-வைரவர் கோயிலுக்கு அருகிலுள்ள வீதியை விரைவில் விடுவித்து தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீவில் பகுதி வைரவர் கோவி லுக்கு அருகாமையிலுள்ள சிறிய குளத்தைப் பாவனைக்குதவாத நிலைக்குட்படுத்தி, அத ற்கு அண்மையாக இருந்த வீதியை தனியார் ஒருவர் விவசாய நடவடிக்கைக்காக மறித்த மையை அடுத்து அப்பகுதி விவசாயிகள் பல் வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரி விக்கின்றனர்.

குறித்த பகுதியில் நீண்ட காலமாக சிறிய குளம் ஒன்று காணப்பட்டது.

இக்குளத்தில் அப்பகுதியில் மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகள் நீரை அருந்துவ துடன் விவசாயிகள் தமது சிறுதேவைகளு க்காகவும் பயன்படுத்தி வந்தனர்.

எனினும் இக்குளத்தை பாவனைக்குதவாத நிலைக்குட்படுத்தி அதற்கு அருகாமையில் சென்ற வீதியையும் மறித்து விவசாய நட வடிக்கைக்கு குறித்த நபரினால் பயன்படுத் தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இவ்வீதிக்குப் பதிலாக வயல் வெளியில் தற்காலிக வீதி ஒன்று அமைக் கப்பட்டு அதனூடாகவே இப்பகுதி விவசா யிகள் பயணித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த நான்கு மாதங்க ளுக்கு முன்னர் அப்பகுதி வயல்களில் சட்ட விரோத மண் அகழ்வு நடைபெற்றமையை பார்வையிடுவதற்கு கிளிநொச்சி கமநல சேவை உதவி ஆணையாளர் வருகை தந்த போது இக் குளத்தையும் வீதியையும் பார்வையிட்டார்.

இதன்போது உரிய வீதியை விரைவில் விடுவித்து தருவதாகவும் குளத்தை வெட்டி பாவ னைக்கு ஏற்ற வகையில் அமைத்துத் தருவ தாகவும் அவர் உறுதி மொழி வழங்கியிருந் தார்.

எனினும் இது தொடர்பில் இதுவரை எந்த விதமான முன்னாயத்த வேலைகளும் இடம் பெறவில்லையென அப்பகுதி விவசாயிக ளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த வீதியை உள்ளடக்கிய நிலத்தில் நெல் அறுவடை முடிந்தவுடன் வேறு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை உடனடியாக உதவி ஆணை யாளர் தடுத்து நிறுத்தி தான் கூறிய படி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக் கின்றனர். (அ-2-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கவுள்ளேன்

## அமைச்சர் சஜித் அறிவிப்பு

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில விக்ரமசிங்கவின் வழிநடத்தல்களின் கீழ் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கவுள்ளதாக வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் செவ்சிறிபாயவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனது எந்தவொரு ஒப்பந்தமும் ஒளிவு மறைவுமின்றி விளம்பரப்படுத்தப்படும்.

எனது அமைச்சின் கீழ் உள்ள அதிகார சபைகள், நிறுவனங்களில் ஒருபோதும் எனது கட்சிக்காரர், சொந்தக்காரர் மற்றும் தேர்தலில் உதவி செய்தவர்களை பணிப்பாளர் சபையில் நியமிக்கப் போவதில்லை.

ஒவ்வொரு துறையிலும் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர்களையே தேடுகின்றேன்.

எனது அமைச்சினை நடைபெற்றுள்ள இலஞ்சம், நிதி மோசடிகளை சர்வதேச கணக்காய்வாளர் கம்பனி ஆய்வு செய்து வருகின்றது.

அதன் பின் இந்த அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் ஊழல், நிதி மோசடி, அதற்கு உடந்தையானவர்கள் வெளியில் அனுப்பப்படுவார்கள் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி 50 ஆயிரம் வீடுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் இந்த வீடுகளுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் அமைச்சு அதிகாரிகள் ஈடுபடவுள்ளனர்.

மேலும் யுத்தத்ததால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வரவேண்டுமென புத்துஜீவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

# அரசியல்வாதிகளுக்கு எதிராக ஜன. மட்டும் 300முறைப்பாடுகள்

கடந்த அரசின் அரசியல்வாதிகள் மற்றும் அந்த அரசின் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் மற்றும் மோசடி தொடர்பாக 300 இற்கு அதிகமான முறைப்பாடுகள் ஜனவரி மாதம் கிடைத்துள்ளதாக ஊழல் மற்றும் மோசடி ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் ரமேஷ் ஆர். தர்மவர்தன தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்வதற்கு தேவையான வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் முறைப்பாடுகள் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர மேலும தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 300-340 | 350 | 300 | 400 |
| தக்காளி | 240 | 260 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 45 | 50 |
| கோவா | 100 | 80 | 120 | 120 |
| கரட் | 220 | 160 | 120 | 200 |
| பூசணி | 100 | 100 | 60 | 120 |
| புடோல் | 60 | 120 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 120 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 130 | 150 |
| லீக்ஸ் | 250 | 240 | – | 350 |
| பீற்றூட் | 180 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | – | 350 | 300 | 240 |
| முருங்கைக்காய் | – | 600 | – | – |
| போஞ்சி | – | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | – | 100 | 60 | 90 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 30 | 50 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-45 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 90-110 | 140 | 180 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 271

றிஸ் கிரி




மாதவி தியாகராஜா





மயூரதன் மயூரன்




தனு தனுஜா




யானுர்தி உதயகுமாரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முத்தையன்கட்டு பிரதேசத்தில்

# எதிர்பார்க்கப்பட்டளவில் நெல் விளைச்சலில்லை

(மல்லாவி)

முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையின் போது 4 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு தற்போது அறுவடை நடைபெற்று வருவதாகவும் ஆயினும் எதிர்பார்க்கப்பட்ட நெல் விளைச்சல் கிடைக்கவில்லையென முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் கு.செந்தூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இக்குளத்தின் கீழ் 2010-2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட விவசாயிகள் வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்கினால் விவசாயச் செய்கைகள் அழிவடைந்தமையால் பெரும் பொருளாதார பின்னடைவை எதிர்கொண்டிருந்தனர்.

ஆயினும் கடந்த வருட இறுதியில் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி காரணமாக முத்தையன்கட்டுக் குளத்திற்கு 22 அடிநீர் கிடைக்கப்பெற்றமையால் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆயினும் பழ ஈயின் நோய்த்தாக்கம் காரணமாக நெல் மணிகள் பால்பருவ காலத்தில் பாதிப்படைந்துள்ளன.

இதனால் ஏக்கருக்கு நெல்விளைச்சல் 30 தொடக்கம் 35 வரையான மூடைகள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது 15 தொடக்கம் 25 நெல்மூடைகள் அறுவடை செய்யக்கூடியதாகவுள்ளன. 4 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் மீண்டும் ஒரு பொருளாதாரரீதியிலான பின்னடைவை எதிர்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்களுடன் அவசர கலந்துரையாடல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள கமநல சேவை நிலையப் பிரிவுகளில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருக்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் இடங்களைச் சேர்ந்த நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறுமென முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ராஜரட்ணம் விஜயகுமார் அறிவித்துள்ளா.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நடப்பாண்டில் காலபோக நெல் அறுடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நெல்விளைச்சல் இம்முறை கிடைக்கப் பெறவில்லை. ஏக்கருக்கு 50 தொடக்கம் 60புசல் நெல் அறுவடையாகின்றது.

இந்நிலையில் நெல் அறுவடை இயந்திரத்தின் கூலி அதிகரித்து காணப்படுவதால் இது தொடர்பாக அறுவடை இயந்திரங்களின் உரிமையாளர்களுடன் அவசர கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் அனைத்து அறுவடை இயந்திரங்களின் உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

நெல் அறுவடைக்கான இயந்திர கூலி அதிகரித்துள்ளது என வலம்புரி பத்திரிகையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-15)




# அனிஞ்சியன்குளத்தில் பசும்பாற் பண்ணை

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் அனிஞ்சியன்குளம் பகுதியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 30 மில்லியன் ரூபாய் செலவில் பாற்பண்ணை அமைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் அமைந்துள்ள முதலாவது பாற்பண்ணை இதுவாகும். இங்கு முதற்கட்டமாக பிற மாவட்டங்களில் இருந்து 25 நல்லின பசுக்களை கொண்டு வந்து அவற்றின் கன்றுகளை பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

அவற்றில் இருந்து பெறப்படும் பாலை துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தில் உள்ள பால் பதனிடும் சங்கத்திற்கு கொடுத்து வருகின்றோம்.

இந்த வருடம் இந்த பாற்பண்ணையில் பால் பதனிடும் திணைக்களம் அமைப்பதோடு பால் உற்பத்திப் பொருட்களை தயாரித்து விநியோகிக்கவுள்ளோம். அத்துடன் இங்கு பண்ணையாளர்களுக்கு செயல்முறை பயிற்சிகள் வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# ஸ்கந்தபுரம் மேற்கிற்கு மின்சாரம் கிடைக்கவில்லை

(மருதநகர்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மேற்கு பிரதேசத்தில் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி அடைந்த நிலையிலும் இதுவரை வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லையென அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்திற்கான மின்சாரம் வழங்கப்பட்டு இரு மாதங்கள் கடந்த நிலையிலும் அப்பகுதி யிலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட வில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இல.2 ஸ்கந்தபுரம் அ.த. க. பாடசாலைக்கு அருகாமையில் இதற்கென ஒரு மின்மாற்றி அமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இருமாதங்கள் கடந்த நிலையில் வீடுகளுக்கான மின்சார இணைப்பு வழங்கப்படவில்லையென அம்மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் 400இற்கு மேற்பட்ட குடியிருப்பாளர் வீட்டுத்திட்டம் நிறைவடைந்த நிலையில் தமது வீடுகளுக்கான வயரிங் வேலைகளை முடித்து விட்டு மின்சாரத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இது தொடர்பில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து இப்பகுதிக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (அ-2-285)

# தைப்பொங்கல் விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் தைப்பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஸ்கந்தபுரம் கரைச்சி பிரதேச சபை நூலகத்தில் நடைபெறும்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழரசு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே இதில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-2-272)

# வட்டக்கச்சியில் பொது நூலகம்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் வட்டக்கச்சி பொது நூலகத்தின் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டக்கச்சியின் பொது நூலக வளாகத்தில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் வி. சுவீஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழரசுக் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நூலகமானது கரைச்சி பிரதேச உறுப்பினர்களான பி.சுவீஸ்கரன் ,சி.சிவச்செல்வன்,பே.செல்லத்துரை ஆகியோரின் 2014 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து 45 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-277)



வ/புதுக்குளம் மகா வித்தியால வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலையின் அதிபர் அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது...(படங்கள்:குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
மனோன்மணி கலையரங்கு

# திறப்பு விழா அழைப்பிதழ்

இடம்:- கலாமன்றம், காரைநகர், காலம்:- 03.02.2015 செவ்வாய்க்கிழமை
காலை 11.00 மணி, மாலை 4.00 மணி

தலைவர்
**திரு.ந.சோதிநாதன்** அவர்கள்
(தலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

நிகழ்ச்சி நிரல்

**காலை நிகழ்வுகள் மு.ப.11.00 மணி**

- மு.ப. 11.00-12.35 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் திரு.சண்முகம் சிவஞானம் அவர்களினால் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக அமைத்து வழங்கிய ''மனோன்மணி கலையரங்கு'' சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தல்.
- கலாமன்றத்திற்கான மன்றக்கீதம் மற்றும் மன்றக்கொடி என்பனவும் அங்குரார்ப்பணம் செய்தல்.

**மாலை நிகழ்வுகள் பி.ப.04.00 மணி**

♦மங்கல விளக்கேற்றல்
♦வேதபாராயணம்:- வேத விற்பன்னர்கள்
♦திருமுறை ஓதல்
♦மங்கல இசை:- ஈழத்தின் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள்
♦புஷ்பாஞ்சலி:- கலாமன்ற நடனத்துறை மாணவிகள்
♦வரவேற்புரை
♦ஆசியுரை
♦தலைமையுரை
♦ **வாழ்த்துரைகள்:-**
**திருமதி ரூபினி வரதலிங்கம்** அவர்கள் மேலதிக அரசாங்க அதிபர். யாழ்.மாவட்டம்)
**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்** அவர்கள்
(தலைவர்.ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
**திரு.ப.விக்னேஸ்வரன்** அவர்கள் (ஓய்வுநிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர்)
♦ **கௌரவிப்பு**
♦ **இசைவேள்வி:-** யாழ்.பிரபல கர்நாடகக் கலைஞர்கள்
♦ **சிறப்பு பட்டிமண்டபம்:-**

**நாம் இருக்கும் நாடு நமது என்று அறிந்தோமா?**

| அறிந்தோம்! | அறியவில்லை |
|---|---|
| திரு.செ.சொபிஷன் | திரு.அ.வாசுதேவா |
| திரு.தெ.ஹர்ஷன் | திரு.ந.ஐங்கரன் |

**நடுவர்**
**கம்பவாரிதி இ.ஜெயராஜ்** அவர்கள் (அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்)
**நன்றியுரை**

**குறிப்பு:-**
01) குறித்த நேரத்திற்கு நிகழ்வினை ஆரம்பிப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் எதிர் பார்க்கின்றோம்.
02) கலைஞர்கள் மற்றும் கலாரசிகர்களுக்கான போக்குவரத்து சேவை எமது கலாமன்றத்தின் யாழ்.கிளையிலிருந்து பி.ப.3.15 மணிக்கு ஆரம்பமாகும். (இல.11.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் -உதயன் பணிமனை அருகாமையிலுள்ள ஒழுங்கை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.**



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



**தைப்பூச விழா- 03.02.2015**
**செவ்வாய்க்கிழமை**
நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி



அம்மன் கோயிலில்
வழமைபோன்று இவ் வருடமும்
**'தைப்பூச விழா'**
**மிகவும் சிறப்பாக**
**நடைபெறவுள்ளது**

முற்பகல் 10.30 மணிக்கு விசேட அபிஷேகம்
நண்பகல் 12.00 மணிக்கு உச்சிக் காலப்பூசை
பிற்பகல் 12.30 மணிக்கு விசேட வசந்த மண்டப் பூசை
பிற்பகல் 1.30 மணிக்கு அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்
அன்றைய தினம்:-

✷ விசேட மங்கல வாத்தியம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
✷ வழமைபோல் விசேட படகு சேவையும் விசேட போக்குவரத்துப் பேருந்துச் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
✷ நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரால் அடியார்களுக்கு அன்ன தானம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
✷ தம்பையா தாக சாந்தி நிலையத்தாரின் தாக சாந்திச் சேவையும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

**அடியார்கள் வருகை தந்து அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அன்போடு அழைக்கின்றோம். பால், இளநீர் கொண்டு வரும் அடியவர்கள் அபிஷேக நேரத்திற்கு முன்பாக கோயிலுக்குச் சமுகமளிக்க வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றோம்.**

**அறங்காவலர் சபை,**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. ஆறுமுகம் ஜெயபாலசிங்கம்



அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றமையையிட்டு அகமகிழ்ந்து எமது அன்பு கலந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பில் அரவணைக்கும் உத்தமனாய்
பண்பில் மாசற்ற மணிச் சுடராய்
செயற்திறனில் ஈடு இணையற்ற செயல் வீரனாய்
உதவி புரிவதில் உள்ளன்பு கொண்ட தோழனாய்
ஊருக்கோர் தொண்டனாய்
மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தம்மையே
ஆகுதியாக்குகின்ற ஆசானாய்
வள்ளுவரின் பாதை தனில் வாழ்ந்து காட்டும்
வள்ளுவர் அக்கடமியின் இயக்குநராய்
எமை வழிப்படுத்தும் எம் அன்பான ஆசானுக்கு
பலகோடி வாழ்த்துக்களும்
பணிவான பாராட்டுக்களும் .

**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர்கள், மாணவர்கள், ஆளணியினர்**
**வள்ளுவர் அக்கடமி, உரும்பிராய்.**

(9406)
(9406)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெள்ளம் வருவதற்கு முன்னே அணை கட்டவேண்டும்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நோக்கம் வெற்றி தந்ததா?

திருநெல்வேலியில் புகழோங்கிக்கொண்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டது. ஒரு பிரபல்யமான கல்லூரிக்கு மூடுவிழாச் செய்து அந்த இடத்தில் பல்கலைக்கழகம் அமைப்பது பொருத்தமானதல்ல என்று வாதிட்டோர் பலர்.

எனினும் தமிழ் மண்ணில் பல்கலைக்கழகம் அமைவது மிகப்பெரும் வரப்பிரசாதம் என்று கருதப்பட்டதன் அடிப்படையில், திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் என்ற மகுட வாசகத்திற்குரிய திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி; பாடசாலைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. ஸ்சைவசமயத்தின் காப்பகமாக இருந்த பரமேஸ்வராக் கல்லூரி மூடப்பட்டதால் வேதனை கொண்டவர்கள் ஏராளம்.

எனினும் ஒன்றை இழந்து இன்னொன்றைப் பெறுதல் என்ற பண்பாட்டில் பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றம் கண்டது. ஆயினும் பார்வதி – பரமேஸ்வரன் மட்டும் இடம்பெயராமல் தமது சொந்த இடத்தில் இருந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் போராட்டம் என்பதே கல்வியில் இருந்து தான் ஆரம்பிக்கப்பட்டது. தரப்படுத்தல் என்ற பெயரில் தமிழ் இளைஞர்களின் பட்டப்படிப்புக் கல்விக்கு சிங்களப் பேரினவாதம் எல்லையிட்டதன் மூலம் வெறுப்படைந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் பற்றிச்சிந்தித்தனர்.

அடிப்படை நிலைமை இதுவாக இருந்த போதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியுள்ளதா? என்ற கேள்வி இப்போது எழுகிறது.

பல்கலைக்கழகம் என்பது தனித்து பட்டங்களை வழங்குவதை மட்டும் பணியாகக் கொண்டதல்ல. ஒரு பிரதேசத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமையுமாயின் அதனால் அந்த பிரதேச மக்கள் சிறப்பான வாழ்வையும் தொழில் வளங்களையும் கல்வி மேம்பாட்டையும் பெற்றுக்கொள்வர்.

அந்தளவிற்கு அந்தப் பல்கலைக்கழகம் கள ஆய்வுகளை மேற்கொண்டு தான் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களை, தொழில் முயற்சிகளை, முதலீட்டு நுட்பங்களை வெளிப்படுத்தி நிற்கும்.

எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 41 ஆண்டு காலப்பணியில் மேற்குறிப்பிட்ட விடயங்களில் திருப்திகரமான முடிவுகள் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும்.

இப்போதெல்லாம் யாழ்ப்பாண மண்ணில் குடிநீர்ப் பிரச்சினையென்பது பூதாகரமாகி உள்ளது. சுன்னாகப் பிரதேசத்தில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் காணப்பட்ட கழிவு எண்ணெய்க் கசிவு மருதனார்மடம், இணுவில், உரும்பிராய் என்று எல்லை கடந்து செல்கிறது.

எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இது தொடர்பில் மேற்கொண்ட ஆய்வுகள்; பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகள் எதனையும் வெளிப்படுத்தி உள்ளதா? என்ற கேள்விக்கு மௌனமாக இருப்பதைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை.

சுன்னாகம் மின்சார நிலையம் நிலத்தடியில் கழிவு ஒயிலை விடுவதற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திடம் இதுகுறித்த ஆலோசனையைப் பெற்றிருக்க வேண்டும். அதுதான் நடக்கவில்லையெனில் வடக்கு மாகாண முதலமைச்சர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

சுன்னாகத்து கிணறுகளில் காணப்படும் கழிவு எண்ணையை இல்லாது செய்வதற்கு உங்கள் பரிந்துரை என்ன? என்பதாக அந்தக்கடிதம் அமைந்திருக்க வேண்டும்.

இவை இரண்டும் நடக்காத போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன் தகைமைசார் நிலையை பெறுமதியாக்கவில்லை என்று கருதவேண்டியிருக்கும்.

இவ்வாறு கூறுவது யாரையும் குறைகாண்பதற்கானதன்று. மாறாக எங்களிடம் பல்கலைக்கழகம் இருக்கிறது. அது சமூக, பொருளாதார, அரசியல், புவியியல் ரீதியில் எங்களைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லையே? என்ற மன நெருடலை பகிர்வதற்காகவே இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

# ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் சர்வதேச விசாரணை அவசியம்

## திட்டமிட்டபடி நடக்கும் என்கிறது த.தே.கூட்டமைப்பு

ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் இலங்கை மீதான சர்வதேச விசாரணை அவசியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வட மாகாண உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளின் ஒழுங்கமைப்பில் சிரேஸ்ட சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு பாராட்டு விழாவென்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியாலாளர்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னர் திட்டமிட்ட படியே எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனிதவுரிமை கூட்டத் தொடரில் இலங்கை மீதான சர்வதேச விசாரணை தொடரும்.

அதற்கான ஏற்பாடுகளினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. இலங்கை மீதான சர்வதேச விசாரணை போன்ற என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் எவ்வித மாற்று கருத்தும் இல்லை.

சர்வதேச விசாரணையினை ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்க கூட்டமைப்பு முயற்சி என்ற தகவல்கள் எல்லாம் பொய்யானது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனிதவுரிமை கூட்டத் தொடரிற்கான முன்னேற்பாடுகளினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தற்போதே ஆரம்பித்துள்ளது என அவர் தெரிவித்தார். (செ-4)

# இந்திய அரசின் வீட்டு திட்டத்திற்கு அடிக்கல் நாட்ட மோடிக்கு அழைப்பு

(கொழும்பு)

இந்திய அரசின் உதவியுடன் மலையகத்தில் நிறைவேற்றப்படவுள்ள வீடமைப்பு திட்டத்தின் ஒரு தொகுதிக்கான அடிக்கல்லை இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக மலையகத்துக்கு விஜயம் செய்து நாட்டிட வேண்டும் என்ற அழைப்பை நாம் கூட்டாக விடுத்துள்ளோம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை இந்திய தூதுவர் வை.கே. சின்ஹா உடன் இந்திய தூதரகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக ஊடகங்களுக்கு மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்த சந்திப்பில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் திகாம்பரம், கல்வி ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன், பெருந்தோட்ட ராஜாங்க அமைச்சர் வேலாயுதம் ஆகியோருடன் நானும் கலந்துகொண்டேன்.

கடந்த சுமார் மூன்று ஆண்டுகளாக இழுபறி நிலையில் இருந்த இந்திய அரசின் உதவியுடனான மலையக வீடமைப்பு திட்டம், எதிர்வரும் காலங்களில் செவ்வனே நடைபெற, நாம் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று கூட்டாக இந்திய அரசுடன் இணைந்து செயற்பட உள்ளோம் என்ற உறுதி மொழியை நாம் இந்திய தூதுவருக்கு வழங்கினோம்.

இதன் அடையாளமாக, இந்திய அரசின் உதவியுடன் மலையகத்தில் நிறைவேற்றப்படவுள்ள இந்த வீடமைப்பு திட்டத்தின் ஒரு தொகுதிக்கான அடிக்கல்லை இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக மலையகத்துக்கு விஜயம் செய்து நாட்டிட வேண்டும் என்ற அழைப்பை நாம் கூட்டாக விடுத்துள்ளோம்.

இதை இலங்கை வரும் பிரதமரின் நிகழ்ச்சிநிரலில் இணைத்துக்கொள்ள ஆக்கபூர்வமான முழு முயற்சி செய்வதாக இந்திய தூதுவர் வை.கே. சின்ஹா எமக்கு உறுதியளித்துள்ளார்.

இன்றைய புதிய அரசில் மலையகத்துக்கு அமைச்சரவையிலும், ராஜாங்க அமைச்சர் பட்டியலிலும் கிடைத்துள்ள பதவிகள், மலையக தோட்ட தொழிலாளர்களின் வீடமைப்பு பிரச்சினைக்கு தீர்வை பெற்று தரும் அடிப்படையில் அமைந்துள்ளன.

பெருந்தோட்ட ராஜாங்க அமைச்சின் மூலமாக விடுவிக்கப்படும் காணிகளில், உட்கட்டமைப்பு அமைச்சின் மூலமாக வீடுகள் கட்டப்படும்.

கடந்த காலங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலமாக இழுபறி நிலையில் கொண்டு செல்லப்பட்ட இந்த திட்டம் தடையின்றி முன்னெடுக்கப்பட கல்வி ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணனும் முழு ஒத்துழைப்பை நல்குவார்.

எனவே இனி இந்த திட்டம் முன்னெடுக்கப்பட எந்தவித தங்கு தடையும் கிடையாது. அரசியல் பேதங்களை மறந்து இந்த நல்ல காரியத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன், இந்திய அரசின் வீடமைப்பு திட்ட வீடுகளை பெறவுள்ள பயனாளிகளை தெரிவு செய்வதில், இந்திய தூதரகம் முன்னெடுக்கும் விதிமுறைகளை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இதன்மூலம் எந்த வித கட்சி, சங்க பேதங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

நமது அரசாங்கத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையான லயன் வீடுகளை ஒழித்து தனி வீடுகளை கட்டித்தரும் நிலைப்பாட்டுக்கு, இந்திய வீடமைப்பு திட்டம் பேருதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதன்மூலம் மலையக பாட்டாளி வர்க்கம் ஒரு கிராமிய சூழல் நிறைந்த சுதந்திர வாழ்க்கையை மலைநாட்டில் வாழும் எதிர்காலத்தை நாம் கூட்டாக உருவாக்குவோம் என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

## அமை.சுவாமிநாதன் மருதடிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக யாழ் வருகை தரும் சுவாமிநாதன் இன்று நடைபெறவுள்ள மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மஹா கும்பாபிசேக நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார்.

பின்னர் வலி.வடக்கு தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் சந்திப்புக்களினை ஏற்படுத்தவுள்ளார் என அறிய முடிகிறது. (செ-4)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### கடமை



நாம் இந்த உலகத்திற்கு வந்தோம். ஒரு நாள் இதைவிட்டுப் போகப் போகிறோம். இந்தப் பூமியில் நம்முடன் எதுவும் கெ ண்டு வரவில்லை. நாம் புறப்படும் பொழுது எதுவும் எடுத்துச் செல்ல முடியாது. ஒவ்வொருவருடைய தன்மைக்கேற்ப சூழ்நிலைச் சந்தர்ப்பங்களால் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை ஏற்படுகிறது. ஒவ்வொரு செயலிலும் எந்த அளவு நன்மை செய்ய முடியும் என்பதைச் சிறிது எண்ணிப் பாருங்கள்.

உங்கள் மனதைக் கடமையில் செலுத்துங்கள். உங்கள் முயற்சிக்கு அப்பால் எது நடந்தாலும் அது இறைவனின் விருப்பம் என்று எடுத்துக் கொள்ளுங்கள். அதுதான் இயற்கைச் சட்டம். நாம் பிறப்பதற்கு முன்பே அந்த ஆற்றல் இருந்து கொண்டிருக்கிறது. நாம் இறந்த பின்பும் அந்தப் பேராற்றல் இருந்து கொண்டிருக்கும். இதில் நாம் கவலைப்படுவதில் என்ன இருக்கிறது. கவலையே கவலைப்படுவதற்கு விட்டுவிடுங்கள்! நாம் வாழும் காலத்தில் நமக்காகவும், சமுதாயத்திற்காகவும் ஆற்ற வேண்டிய பொறுப்புக்களைப் பெற்றிருக்கிறோம். அவற்றை நன்குணர்ந்து நல்ல முறையில் நமக்கும், மற்றவர்களுக்கும் திருப்தி தரும் வகையில் நம் கடமைகளைச் செய்ய வேண்டும். அதன் பிறகு மனம் அமைதியடையும். உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வகையில் புதுப்பிரச்சினைகள் மேலும் ஏற்படுத்தாத வகையில் பேராற்றல் பெற்று உங்கள் மனம் சிறந்து விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை வென்றது நியூசிலாந்து



பாகிஸ்தான் அணியுடனான முதல் ஒருநாள் போட்டியில், நியூசிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

வெலிங்டன், வெஸ்ட்பேக் ஸ்ரேடியத்தில் நேற்று முன்தினம் நடந்த முதல் போட்டியில், நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீசியது.

நியூசி. வீரர்களின் துல்லியமான பந்துவீச்சில் திணறிய பாகிஸ்தான் 45.3 ஓவரில் 210 ஓட்டங்கள் எடுத்து ஓல் அவுட் ஆனது. கப்டன் மிஸ்பா உல் ஹக் 58 ஓட்டங்கள் (87 பந்து, 4 பவுண்டரி, 2 சிக்சர்), ஷாகித் அப்ரிடி 67 ஓட்டங்கள் (29 பந்து, 9 பவுண்டரி, 3 சிக்சர்), ஹரிஸ் சோகைல் 23 ஓட்டங்கள் எடுக்க, மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர்.


நியூசிலாந்து பந்துவீச்சில் எலியட் 3, மில்ஸ், போல்ட், கோரி ஆண்டர்சன் தலா 2, மில்னி ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணி 39.3 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 213 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வென்றது. கப்தில் 39, கப்டன் பிரெண்டன் மெக்கல்லம் 17, லதாம் 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ராஸ் டெய்லர் - எலியட் ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்கள் சேர்த்து வெற்றியை வசப்படுத்தியது. டெய்லர் 59● ஓட்டங்கள், எலியட் 64● ஓட்டங்கள் விளாசினர்.

எலியட் ஆட்ட நாயகன் விருது பெற்றார். நியூசிலாந்து 1-0 என முன்னிலை வகிக்க, 2 ஆவது போட்டி நேப்பியரில் நாளை மறுநாள் நடைபெறும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# டோனி வீட்டில் குவா குவா சத்தமாம்

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி விரைவில் அப்பா வாகப் போகிறார்.

கடந்த நவம்பர் மாதம் இந்திய அணி அவுஸ்திரேலிய சுற்றுப்பய ணம் செய்து டெஸ்ட் மற்றும் முத் தரப்பு தொடரில் விளையாடி தோல் வியடைந்தது.

இருப்பினும் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடக்கவுள்ள இந்த உலகக்கிண்ண தொடர் அணித்தலைவர் டோனிக்கு மறக்க முடியாததாக அமையவுள்ளது.

கர்ப்பமாக இருக்கும் அவரது மனைவி சாக்ஷி, கடந்த 7 முதல் 8 மாதங்களாக வீட்டிலேயே இருக் கிறார். அதனால் உலகக் கிண்ண தொடர் நடக்கும் போது டோனி அப்பா ஆகிவிடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அவுஸ்திரேலியாவில் இடைவிடாது போட்டிகளில் பங்கேற்றுக் கொண்டி ருந்தாலும், தொடர்ந்து தனது மனை வியின் நலம் குறித்து விசாரித்துக் கொண்டிருக்கிறார் டோனி. (க)



# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் செரீனா வில்லியம்ஸ் சம்பியன்



அவுஸ்திரேலிய ஓபன் டென னிஸ் போட்டித் தொடரின் மகளிர ஒற்றையர் பிரிவில், நம்பர் 1 வீராங்கனை செரீனா வில்லி யம்ஸ் (வயது-33,அமெரிக்கா) 6ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். விறுவிறுப்பான இறுதிப் போட்டி யில் ரஷ்யாவின் மரியா ஷரபோ வாவுடன் (2ஆவது ரேங்க்) நேற்று முன்தினம் மோதிய செரீனா 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். ஆட்டத்தின் இடையே மழை பெய்து ஆட்டம் சிறிது நேரம் தடை ப்பட்டபோது, கடுமையான இருமல மற்றும் மூச்சுத் திணறலால் அவதிப்பட்ட செரீனா வாந்தி எடுத்ததுடன் மிகுந்த சிரமத்துக்கு ஆளானார்.

தொடர்ந்து விளையாடுவாரா? என்ற கேள்வி எழுந்த நிலையில், சமாளித்துக் கொண்டு மீண்டும் களமிறங்கிய அவருக்கு ஷரபோவா கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் 2ஆவது செட் ஆட்டம் டை பிரேக்கர வரை இழுபறியாக நீடித்தது. ஒரு மணி, 51 நிமிடம் நடந்த விறுவிறுப்பான ஆட்டத்தில் செரீனா 6-3, 7-6 (7-5) என்ற நேர் செட்களில் வென்று 6ஆவது முறையாக ஆஸி. ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை தட்டிச் சென்றார். இறுதியில் அவர் 18 அதிவேக 'ஏஸ்' சர்வீஸ்களை போட்டு அசத்தியது குறிப்பிடத்தக்கது.

◆ ஆஸி. ஓபனில் செரீனா 2003, 2005, 2007, 2009, 2010, 2015இல் கோப்பையை வென்றுள்ளார்.

◆ இது ஒற்றையர் பிரிவில் அவர் பெறும் 19ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். இதன மூலமாக முன்னாள் நட்சத்திரங்கள் மார்டினா நவ்ரத்திலோவா,கிறிஸ் எவர்ட் (தலா 18 பட்டங்கள்) சாதனையை செரீனா முறியடித் துள்ளார்.

◆ கடந்த 2004ஆம் ஆண்டில் இருந்து மரியா ஷரபோவாவுடன் 16 முறை மோதியு ள்ள செரீனா, ஒரு முறை கூட தோற்காமல் தொட ர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார். (க)

# அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்.மாவட்ட செய்லக நலன்புரிக்கழக அரசஅதிபர் வெற்றிக்கிண்ணம் 2014இற்கான இறுதிச்சுற்று விளையாட்டுப்போட்டி தென் மராட்சி பிரதேச மட்டுவில் வளர்மதி விளை யாட்டுக்கழக மைதானத்தில் நலன்புரிச் சங்கத்தலைவி திருமதி றஞ்சினி மோக னேஸ்வரன் தலைமையில்நேற்று முன்தி னம நடைபெற்ற போது 2014இற்கான அரசஅதிபர் வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 37 புள்ளிகளைப் பெற்று தனதாக்கிக்கொண்டது.

வேலணை பிரதேச அணி 35 புள்ளிகளை யும் யாழ்.மாவட்டச் செயலக அணி 30 புள்ளி களையும் பெற்று முறையே 2ஆம் 3ஆம் இடங்களைப்பெற்றுக்கொண்டன.

யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர்கள் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் களை வழங்கியும் அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகம் வெற்றிக்கேடயங்களையும் வழங்கி வீரர்களை கௌரவித்தனர்.(க-29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பகரமான...

சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவான முறையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது என பான் கீ மூனின் பேச்சாளர் எரிக் கனாகோ தெரிவித்துள்ளார்.

பேச்சாளர் மேலும் கூறுகையில்,

யுத்தத்தின் பின்னர் ஏனைய நாடுகளில் போன்றே இலங்கையிலும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி கிரமமான முறையில் தண்டனை விதிப்பதன் மூலம் நிலையான சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நாட்டில் நிலை நாட்ட முடியும்.

யுத்தத்தின் பின்னரான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முனைப்புகளுக்கு முழு அளவில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க ஐ.நா தயாராகவுள்ளது.

நம்பகமான முறையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

இலங்கையின் புதிய அரசாங்கம் உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க முயற்சித்து வருகின்றமை குறித்து அறியக் கிடைத்துள்ளது.

எனினும் இவ் விசாரணைப் பொறி முறைமை சர்வதேச தர நிர்ணயங்களுக்கு உட்பட்ட வகையில் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதன் மூலம் யுத்தக் குற்றச் செயல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஒத்துழைப்பையும் இலங்கை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (செ)

## பாதுகாப்பு...

செய்யும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு அமையவே, அவர் இவ்வாறு பயணம் செய்யவுள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 6ஆம் திகதி பலாலி படைத்தளத்துக்கு செல்லும் அவர், யாழ்.படைத் தலைமையகத்தில் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து படையதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

இதையடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா படைத்தலைமையகங்களுக்கு 7ஆம் திகதி செல்லும் அவர், அங்கு படையதிகாரிகளின் கருத்துக்களை அறிந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன், திருகோணமலைக்கு 8ஆம் திகதி செல்லும் அவர் கிழக்குப் படைத்தலைமையகத்திலும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து படையதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார். (செ)

## தமிழ் அரசியல்...

கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இவ்வழிபாட்டு நிகழ்வில் பல்வேறுபட்ட இந்து அமைப்புக்களும் கலந்து கொண்டிருந்தன.

யாழ் இந்து சமயப் பேரவைத்தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்வழிபாட்டு நிகழ்வு மங்கள விளக்கேற்றத்துடன் ஆரம்பமாகி மங்கள வாத்திய இசை ஆராதனையும் தமிழ் வேத அர்ச்சனையும் இடம்பெற்றது.

தொடர்ந்த துன்பம் தீர தேங்காய் அடித்தலும் நெய் தீபம் ஏற்றல் நிகழ்வும் இடம்பெற்று பின்னர் அரசியல் கைதிகளின் நலன்வேண்டி விசேட பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்நிகழ்வு தொடர்பில் சின்மயா மிசனின் வதிவிடப்பிரதிநிதி ஜாக்கிரத சைதன்யா கருத்தும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று கூடி தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கான பிரார்த்தனை நிகழ்வினை ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் அரசியல் கைதிகள் எந்தவித விசாரணையின்றி சிறைச்சாலைகளில் நீண்ட நாட்களாக வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உறவினர்கள் அதனை நினைத்து தவித்துக் கொண்டுள்ளனர்.

அந்தக் கைதிகளின் விசாரணைகளினை துரிதப்படுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற ஆத்மார்த்தமான பிரார்த்தனை நிகழ்வாக இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது என சுவாமிகள் தெரிவித்துள்ளார். (செ-4)

## தை...

டேர்பெங்குரேயால உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் அதிகம் பரவுவதாக அமைச்சின் தொற்றுநோய் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு அடுத்த வாரம் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-1)


### கட்டாரில் வேலைவாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| Tyre, Men - 4 Men | 1500 RL 57000 SR + Tips Food Free (Accomodation Free) |
| Production Operator and Labour | 900 RM - 4000 SR (Accomodation no food + OT) |
| Airport - Tolly Boy | 1200 RL - 45600 SR No Food Accomodation Free |
| Airport - Duty Free | 3000 RL - 111000 SR Food Free Accomodation Free |
| பில்டிங் கேன்ஸ் செக்சன் | |
| மேசன் | 2800 RM - 110 000 SR |
| பிளம்பர் | 2000 RM - 85000 SR |
| வெல்டர் | 2000 RM - 85000 SR |
| காப்பெண்டர் | 2000 RM - 85000 SR |
| வயறிங் | 2000 RM - 85000 SR |
| Unit Company Labours | 900 RM + OT 45000 SR |
| Airport Cleaners | 900 RM + OT 45000 SR |
| Company Labours | 900 RM + OT 45000 SR |

(C-10000)

கையடக்கத் தொலைபேசி 076 772 8640, 076 7729332
thineshjeyakumar 2012@gmail.com

### வீடு விற்பனைக்கு

கெருடாவில் வடக்கு சாவகச்சேரியில்
நல்லநிலையில் உள்ள வீடு
குறைந்த விலையில்
விற்பனைக்கு உண்டு.
(9413)
தொடர்பு- 0779065056

தைப்பூச புதிய
### ஒகன் இசை வகுப்பு (Keyboard)

ஆசிரியர் - ஸ்ரீகுகன்

செவ்வாய் காலை மாலை
வகுப்புக்கள் இடம்பெறும்
தொடர்பு:
ஸப்தஸ்வரம் இசை மன்றம்
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு.
(9415)
0776980573

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு நீர்கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலை ஆட்கள் தேவை. மாத வேதனமாக ரூபா 24,000/= வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி உண்டு.

ஆண்கள் மட்டும்-வயது 18 தொடக்கம் 25 வரை

தொடர்பு:-கிங்ஸ் எலக்ரோனிக்

குறிப்பு:- திங்கட்கிழமையில் இருந்து தொடர்பு கொள்ளவும்

11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:-021 222 3857 (9404)


## நயினையில் தைப்பூச விழா



### அமுதசுரபியில் அடியார்களுக்கு சிறப்பு அன்னதானம்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தைப்பூச விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. அபிஷேகங்களைத் தொடர்ந்து பூசை வழிபாடு நிறைவுபெற்றதும் அம்பாள் திருமஞ்சத்தில் ஆரோகணித்து அருள் பாலிப்பார். அன்றைய தினம் நயினாதீவுக்கு வரும் அடியார்கள் அனைவர்க்கும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் சிறப்பு அன்னதானம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம் (9412)

**அடியார்கள் தங்குவதற்கு அன்னபூரணி இறை பயணிகள் இல்லமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

பிரதானசாலை, நயினாதீவு -02,
தொ.பே. இல: 021-3213575

இங்ஙனம்: நிர்வாகம்
ஸ்ரீ அமுதசுரபி அன்னதான சபை

## மரண அறிவித்தல்



### திருமதி எலிசபேத் ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை- புனித மரியாள் மகளிர் பாடசாலை)

ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், மண்குழி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் ஜேம்ஸ் 31.01.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சவரிமுத்து ஜேம்ஸின் அன்பு மனைவியும், இயூஜின் (சண்முகநாதன் பாடசாலையின் ஆசிரியை), காலஞ்சென்ற ஜேம்ஸ் அனித்தா மற்றும் ஜெயசீலன் (அவுஸ்திரேலியா), கஸ்ரிங் கமிலஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருஜிணன், நீற்றா (அவுஸ்திரேலியா), சுமணா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், டண்ஸ்ரன், ஜெரோம், யூலியன், ஜெருசா (அவுஸ்திரேலியா), ஷாலிக்கா, சஜ்ஜெய் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.02.2015) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஊர்காவற்றுறை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை (9409)

தகவல்:
குடும்பத்தினர்

## உ ஓராண்டு நினைவலைகள்



அமரர்
### திருமதி கந்தசாமி தவேஸ்வரி

திதி: 02.02.2015

பிறப்பு 24 . 10 . 1954
இறப்பு 26 . 01 . 2015

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
எம் வாழ்வில்
ஒளி விளக்கேற்றிய – எம்
அன்புத் தெய்வமே
ஓராண்டென்ன
நூறாண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் – எம்மை
விட்டு விலகாதம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.63, பூந்தோட்டம்,
தட்டையர் மலை,
ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.

(ச-001)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீபவனின்...

தாக பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் நாட்டின் 44-வது தலைமை நீதியரசராக கே.ஸ்ரீ பவனை நியமித்துள்ளது.

உச்சநீதிமன்றத்தில் பணியாற்றும் மூத்த நீதியரசர் என்ற ரீதியில் கே. ஸ்ரீபவனுக்கு தலைமை நீதியரசர் பதவி கிடைத்திருப்பதை வரவேற்பதாகவும் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார்.

இலங்கை சட்டக்கல்லூரியில் கே.ஸ்ரீ பவன் தனது மாணவராக கல்வி கற்றவர் என்பதையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவதாகவும் விக்னேஸ்வரன் கூறினார்.

எனினும், நீண்டகால பிரச்சினைகளை ஒரேநாளில் தனியொரு நபரினால் தீர்த்து விட முடியாது என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து நீதித்துறைக்கு முறைப்படி வந்தவர் ஸ்ரீபவன் என்றும் கூறிய விக்னேஸ்வரன், ஆனால் மற்றவர்களும் அவ்வாறே கொண்டு வரப்பட்டார்கள். அவர்கள்முன்னேற வேண்டியவர்களை தடுத்து மேலே கொண்டு வரப்பட்டவர்கள் என்றார் அவர். (செ)

# பொலிஸார்...

நடத்தியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு, பொலிஸார் ஆர்ப்பாட்டகாரர்கள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் நேற்று மாலை 3 மணியளவில் இளைஞர் ஒருவர் 40 அடி உயரத்தில் இருந்து பாய்ந்து நீரினுள் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை நகரத்தில் பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட மாரிமுத்து மனோஜ் (வயது 20) என்ற இளைஞர் பாபுள் வெற்றிலையை வைத்திருந்ததாக கூறி பொலிஸார் கைது செய்ய முயற்சித்தனர். இதன்போது பொலிஸாரிடமிருந்து தப்பி ஓடியதால் சம்பந்தப்பட்ட இளைஞனை பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பின் தொடர்ந்துள்ளனர்.

இதனை அவதானித்த நபர் நீர்த்தேக்கத்தில் பாய்ந்துள்ளதாக தெரியவருகின்றது. இச்சம்பவத்தினை கண்டித்து நேற்று முன்தினம் மாலை தலவாக்கலை பூண்டுலோயா பிரதான வீதியை மறித்து பொலிஸ் நிலையத்திற்கு முன்பு பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிரதேசத்தில் பதற்ற நிலை காணப்பட்டது. எனினும் இளைஞனை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டபோதிலும் காணாமல் போனவரை குறிப்பிட்ட நேரத்தில் மீட்கவில்லை என கூறி நேற்று காலை 10 மணியளவில் அதிகமான மக்கள் ஹற்றன் -நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை நகர மத்தியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக போக்குவரத்து சேவை பல மணிநேரம் பாதிப்பு ஏற்பட்டது. அத்தோடு அதன் பின் ஆர்ப்பாட்டகாரர்கள் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போது பல மணி நேரம் புகையிரத சேவை சம்பவ இடத்தில் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் புகையிரதம் திரும்பி நானுஓயா வரை சென்றது. இதேவேளை பாதுகாப்பு கருதி பொலிஸாரும் அதிரடி படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை தலவாக்கலை பகுதியில் ரயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைப பிரயோகம் மேற்கொண்டு அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர். (செ-11)

# பேக்கரி...

தாக அந்த சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை சிற்றுண்டிச்சாலைகளிலும் இன்று முதல் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி மதிய உணவுப் பொதி மற்றும் கொத்து ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. பிளேன் ரீ ஒன்றின் விலை 10 ரூபாயாகும். ரீ 05 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அப்பத்தின் நிர்ணய விலை 10 ரூபாயாகும்.

திருத்தியமைக்கப்பட்ட விலைப்பட்டியல் அனைத்தும் சிற்றுண்டிச்சாலைகளிலும் வைக்கப்பட வேண்டுமென அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

எரிபொருட்கள் மற்றும் 13 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமையால் நுகர்வோர் பயன்பெறும் விதத்திலேயே சிற்றுண்டிச்சாலை உணவுகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ)

# புலம்பெயர்...

சாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசினால் நாடுகடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழர் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை உட்பட 15 அமைப்புக்களுக்கும், தனி நபர்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

# முதலமைச்சர்...

தொடர்பில் விக்னேஸ்வரனுடன் அவர் விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட பலிஹக்கார தனது கடமைகளை பொறுப்பேற்பதற்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளார்.

அவர் இன்று அதிகாரபூர்வமாக தனது பணியகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையில், போருக்குப் பின்னரான வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் இவருக்கு படையதிகாரிகளால் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ)

# பைசர் முஸ்தபா...

தனது பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்துவிட்டு வெளிநாடு சென்றுள்ளார்.

விமான சேவைகள் அமைச்சின் கீழ் வர வேண்டிய சில விடயங்களை துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சின் கீழ் இணைத்து வர்த்தமானியில் உள்ளடக்கியுள்ளமையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் சட்டத்தரணியாக முழுநேரம் செயற்பட வேண்டும் என்பதற்காகவே தான் அமைச்சுப் பதவியில் இருந்து விலக உத்தேசித்துள்ளதாகவும் ஜனாதிபதி மேல் தனக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளதாகவும் நேற்று முற்பகல் வினவியதுபோது பைசா முஸ்தபா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தனிப்பட்ட காரணங்களுக்காகவே பைசர் முஸ்தபா சிங்கப்பூர் சென்றுள்ளதாக அவரது பிரத்தியேக செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (செ)

# சிகரெட்...

ன்ற சிகரெட் நிறுவனத்துக்கும் சந்தைப்படுத்துவோருக்கும் மற்றும் சந்தைப்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு கூறுகின்றது.

அதாவது ஒரு வருட சிறைத் தண்டனையுடன் குற்றப் பணம் விதிக்கப்படும்.

ஏற்கெனவே கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இதனை நடைமுறைக்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்ததாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

தற்போது சந்தைக்கு விடப்பட்டுள்ள சிகரட் பெட்டிகளில் முன்பக்க வெளிப்புறத்தில் 60 வீதம் படத்துடன் புகைத்தல் இருதய நோயை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கை வாசகம் காணப்படுகின்றது.

இருதய நோயாளியொருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதை காட்டுவதாக அந்தப் படம் உள்ளது.

புதிய பெட்டி அறிமுகம் தொடர்பாக தங்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளதால் பழைய பெட்டி கையிருப்பு தொடர்பான பிரச்சினைகள் தங்களுக்கு இல்லை என்று விற்பனையாளர்கள் கூறினர்.

அரசாங்கத்தின் இந்த புதிய எச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கையானது எதிர்பார்க்கும் பலனை தருவதாக அமையும் என உளவியல் மருத்துவர்களும் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை, கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவை கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

எச்சரிக்கை வாசகம் கொண்ட படத்தின் அளவை 80 வீதமாக அதிகரிப்பது என்றும் சிறைத்தண்டனையுடனான அபராதத் தொகையை 50 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பது என்றும் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க தகவல்கள் கூறுகின்றன. (செ)


**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

**இடம் :** யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

**காலம் :** 29.12.2014 முதல் 15.02.2015 வரை

**நேரம் :** காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus), English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது. (The vendor of sweets, bringing Tony home, The prince and the pauper)

பத்திரிகைகளும் பெற்றுக் கொள்ளலாம்

**யாழ். புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
(C-9998)

**தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552**



**வெற்றித்தேர்வு வெளியீட்டகம்**

25 வருடங்களிற்கு மேலாக புலமைப்பரிசில் துறையில் அனுபவம்மிக்க வெற்றித்தேர்வு வளவாளர்களின் தயாரிப்பில்

ஆரம்ப வகுப்புகளில் படிநிலை அறிவு வளர

**2015ஆம் ஆண்டிற்கான நாடளாவிய வெளியீடுகள் வெளிவருகின்றன.**

- தரம் 5 - 20 வெற்றித்தேர்வுகள்
- தரம் 4 - 15 வெற்றித்தேர்வுகள்

(மேலதிக பயிற்சிக்காக இலவச பாடவினாப்பத்திரங்கள்)

- தரம் 1, தரம் 2, தரம் 3 பாடரீதியாக 12 வினாப்பத்திரங்களைக் கொண்ட தவணைக்கான பரீட்சை வழிகாட்டிகள்
- தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்.
- தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் வழிகாட்டி நூல்.
- தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வாக்கியங்கள் எழுதப் பழகுவோம் வழிகாட்டி நூல்.

தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்ளவும்.

வினாப்பத்திரங்கள் நேரடியாக பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுகளுடன் வெற்றித்தேர்வு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு: 021 222 9016, 0775388471, 0773126807



**வெளிவந்துவிட்டது!**

**வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின்**

**புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்கள்**

- தரம் 4, தரம் 5 வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு
- தரம் 4, தரம் 5 வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள்
- தரம் 3, தரம் 4, தரம் 5 வாக்கியங்கள் எழுதப் பழகுவோம்

அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
தவறாமல் வாங்கிப் பயனடையுங்கள்.

பாடசாலைகள் விசேட விலைக்கழிவுடன் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
நாடுமுழுவதும் : 021 222 9016
0775388471, 0773126807



**Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 [illegible] 0777 [illegible]
(C-9992)



**ANANDA HOMES AND CONSTRUCTIONS** யாழ்ப்பாணம்

உங்கள் இல்லத்தை தரமாக அமைத்துத்தர



1. சாதரண வீடு - 18 லட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 5 லட்சம் (3அறை, கேரல், குசினி உட்பட)
2. மாடி வீடு - 35 லட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 10 வட்சம் (4அறை, கோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை-11/2 லட்சத்தில்ருந்து
4. பழைய வீடுபுனரமைப்புச் செய்தல்
5. கடை, கட்டிட தொகுதி அமைத்தல்
6. சுற்றுமதில் அமைத்தல்

குறிப்பு : 1. வங்கிகக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும
2. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்

அழையுங்கள் : ஆனந்தன்
T.P.No : 0786155929, 0213205939
(9414)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02-.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org